Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, AUGUST 27, 2022

சனிக்கிழமை ஓகஸ்ட் 08,2022 | ஒளி: 08கதிர் 086 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# ரஞ்சனுக்கு நிபந்தனையுடன் ஜனாதிபதி பொது மன்னிப்பு



நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் தண்டனை அனுபவித்து வந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ், பொது மன்னிப்பு வழங்கி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (26) கையெழுத்திட்ட ஆவணம், சிறைச்சாலை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர், அவர் விடுவிக்கப்பட்டார்.

முழுச் செய்தி P2

# வெளியேறும் முன்னரே ரஞ்சனுக்குப் பதவி



"எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார்

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சா ட்டின் கீழ், சிறைத்த ண்டனை அனுபவித்து வந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ், நேற்று (26) விடுவிக்கப்பட்டார்.

அவர், சிறைச்சாலையில் இருந்து வெளியேறுவதற்கு முன்னரே, நல்லெண்ண தூதுவராக நியமித்து அதற்கான நியமனக் கடிதத்தையும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, சமூக வலைத்தளங்களில் பகிரங்கப்படுத்தியிருந்தார்.

புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நல்லெண்ண தூதுவராகவே அவர் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் மனுஷ நாணயக்கார தனது டுவிட்டரில்,

"ரஞ்சன் ராமநாயக் விடுதலையானதும் இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர் நலனை உலகளவில் மேம்படுத்துவதற்கு ஒரு நல்லெண்ண தூதுவராக பதவியை வழங்கினேன், அதை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். இது வெளிநாட்டு வேலைவாய்ப்பில் அவரது மறைமுக அறிவைப் பயன்படுத்துவதற்கான ஒரு தன்னார்வ நிலையாகும்" என குறிப்பிட்டிருந்தார்.

முழுச் செய்தி P2

# 7 பேருக்கு பிணை

ஜனாதிபதி மாளிகைக்குள் சட்டவிரோதமாக நுழைந்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தானிஷ் அலி உள்ளிட்ட சந்தேகநபர்கள் ஏழுபேரும் நேற்று (26) பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கி உத்தரவிட்டார்.

முழுச் செய்தி P2

# நமது பாதுகாப்புப் படைகள் தொழில்நுட்ப அறிவு வேண்டும்

## வர்ணமளிப்பு விழாவில் ஜனாதிபதி



எதிர்காலத்தில் தரை, வான், கடலில் மாத்திரமன்றி சைபர் தளத்திலும் யுத்தம் நிகழலாம். எனவே எமது வீரர்கள் அவ்வாறான தொழில்நுட்ப யுத்தத்துக்குத் தேவையான அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

முழுச் செய்தி P2

# அரசியல் சுதந்திரம் வழங்குகள்; நியமன எம்.பியாக்குவேன்



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் வெற்றிடம் ஏற்படும் முதல் சந்தர்ப்பத்திலேயே அப்பட்டியலின் ஊடாக ரஞ்சன் ராமநாயக்கவை தேசியப் பட்டியல் எம்.பியாக்குவேன். அதனை முழு மனதுடன் உறுதியளிக்கின்றேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ, டுவிட் செய்துள்ளார்.

முழுச் செய்தி P2

# ஜப்பான் திட்டம்



கடன் நெருக்கடியில் இருந்து இலங்கையை விடுவிக்கும் நோக்கில், கடன் வழங்கிய தரப்பினருடன் கலந்துரையாடலை ஏற்பாடு செய்வதற்கு ஜப்பான் அரசு திட்டமிட்டுள்ளதாக ரொய்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கு கடன் வழங்கிய தரப்பினருடன் கலந்துரையாடுவதே இந்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்வதன் நோக்கமென அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முழுச் செய்தி P2

# தவறிவிழுந்து பெண் மரணம்

நிதர்ஷன் வினோத்



யாழ்ப்பாணம் காரை நகர் பொன்னாலை பாலத்தின் மேல், மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் காரைநகரில் இருந்து மூளாய் வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளில் பின் ஆசனத்தில்

முழுச் செய்தி P2

# நல்லூர் தீர்த்தோற்சவம்



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தீர்த்தோற்சவம் நேற்று (26) இடம்பெற்றது. வருடாந்த மகோற்சவம் ஒகஸ்ட் 2ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நல்லைக்கந்தனின் தீர்த்தோற்சவம் நேற்று (26) காலை விசேட பூஜைகள் நடைபெற்று மூலஸ்தானத்தில் வேலாக வீற்றிருக்கும் வேலன், வள்ளி தெய்வானை சமேதரராய் வலம்வந்தார்.

வெள்ளி எலி வாகனத்தில் பிள்ளையாரும், தங்க மயில் வாகனத்தில் முருகப்பெருமானும் வலம் வந்தனர்.

25 நாட்களைக் கொண்ட

முழுச் செய்தி P2

# அரசியல் கைதிகளின் விடுதலை நாடகமாக அமைந்துவிடக்கூடாது



நல்லாட்சிக் காலத்தில் நடைபெற்றதைப் போன்று அரசியல் கைதிகளின் விடுதலை கண்துடைப்பு நாடகமாக அமைந்துவிடக்

முழுச் செய்தி P2

# பால் புரைக்கேறியதில் 38 நாள் சிசு மரணம்

எஸ்.எம்.எம்.முர்ஷித்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காவத்தமுனை பகுதியினைச் சேர்ந்த 38 நாட்களேயான சிசுவொன்று, பால் புரைக்கேறியதை அடுத்து மரணமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி காவத்தமுனை கெல்பேச் வீட்டுத் திட்டத்திலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது

நேற்று (26) வெள்ளிக்கிழமை அதிகாலை சிசு பால் அருந்தியது.

முழுச் செய்தி P2

# 3,000 மெட்ரிக் தொன் உணவு அமெரிக்காவால் நன்கொடை

இலங்கை முழுவதும் உள்ள பாடசாலைச் சிறார்களுக்குப் போசாக்கினை வழங்குவதற்காக அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் (USDA) ஊடாக Save the Children அமைப்பின் பங்காண்மையுடன் 320 மெட்ரிக் தொன் பிளவுபட்ட மஞ்சள் பட்டாணியை அமெரிக்கா, நேற்று (26) நன்கொடையாக வழங்கியது.



முழுச் செய்தி P2

# கட்டுமானத் தொழிற்றுறையை மீளக்கட்டியெழுப்ப வேண்டும்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடுமையான பாதிப்புக்களை எதிர்நோக்கி வீழ்ச்சி கண்டுள்ள கட்டுமானத் தொழிற்றுறையை மீள்கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஊவா மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் கட்டுமானப் பணியாளர் சங்கத்தின் தேசிய இணைப்பாளருமான வேலாயுதம் ருத்திரதீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெரும்பாலான இளைஞர்கள் நம் நாட்டிலும், தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு செல்லும் போதும் கட்டுமானத் தொழிலையே தேர்ந்தெடுக்கின்றனர். இவர்கள் உரிய தொழில் பயிற்சியின்றி இருப்பதால், கட்டுமான ஒப்பந்ததாரர்கள் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் வழங்காமல் விடுகிறார்கள். தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் (NVQ) இல்லாது

முழுச் செய்தி P2



# திரௌபதி அம்மன் ஆலய கைகலப்பில் ஒருவர் மரணம்; இருவருக்கு காயம்

எம்.எம்.அஹமட் அனாம்

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாகனேரி பிரதேசத்தில் ஆலய திருவிழாவில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம், கைகலப்பாக மாறியதால், இளைஞர் ஒருவர் மரணமடைந்து, இருவர்



முழுச் செய்தி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ரஞ்சனுக்கு நிபந்தனையுடன் ஜனாதிபதி பொது மன்னிப்பு

வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து ரஞ்சன் ராமநாயக்க, நேற்று (26) மாலை வெளியேறினார். அங்கு அமைச்சர் மனுஷ நாணயக்கார, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

எதிர்வரும் காலத்தில், நீதித்துறையை விமர்சிக்கும் வகையில் எந்தவொரு கருத்தை தெரிவிக்கவோ செயற்படவோ கூடாது என்ற நிபந்தனையுடன் பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அலரிமாளிகைக்கு வெளியே நீதித்துறையை அவமதிக்கும் வகையில் ரஞ்சன் ராமநாயக்க 2017 ஓகஸ்ட் 21 ஆம் திகதி கருத்து தெரிவித்தமைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் 2021 ஜனவரி 12 ஆம் திகதியன்று ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த நிலையில், நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக மன்னிப்பு கோரி, ரஞ்சன் ராமநாயக்க சத்தியக் கடதாசியொன்றை ஓகஸ்ட் (25) நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

தான் தெரிவித்த கருத்துக்கள் முற்றிலும் பிழையானவை என்றும் அந்தக் கருத்துக்களினால் பிரதம நீதியரசர் உள்ளிட்ட நீதித்துறையினர் அனைவருக்கும் அகௌரவம் ஏற்பட்டமைக்காக மன்னிப்புக் கோருவதாகவும் குறித்த சத்தியக் கடதாசி மூலம் தெரிவித்திருந்தார்.

தான் கூறிய கருத்துக்கள் முற்றிலும் பொய்யானவை என்றும் அவற்றை மீளப் பெறுவதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிக்கமாட்டேன் என்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த சத்தியக்கடதாசியில் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

அதனையடுத்தே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கையொப்பமிடப்பட்ட பொதுமன்னிப்பு கடிதம், சிறைச்சாலை அதிகாரிகளிடம் நேற்று (26) கையளிக்கப்பட்டு, நேற்றையதினமே விடுவிக்கப்பட்டார்.

# வெளியேறும் முன்னரே ரஞ்சனுக்குப் பதவி

இந்நிலையில், வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து வெளியேறிய அவர், எதிர்க்கட்சி தலைவருடன் வந்து, எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 7 பேருக்கு பிணை

குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள லஹிரு வீரசேகர உள்ளிட்ட சந்தேகநபர்கள் நேற்று (26) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

இதனிடையே, ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்து, படுக்கை விரிப்பை திருடிய குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் நேற்று (26) ஆஜர்படுத்தப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேகநபர்களின் வெளிநாட்டு பயணங்களை தடை செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு மத்திய குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்து அதன் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் 36 சந்தேகநபர்கள் கொழும்பு மத்திய பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களில் 35 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் உள்ளிட்ட முன்பிணை பெற்ற சந்தேகநபர்களும் நேற்று (26) மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

பிரதமர் அலுவலகத்துக்குள் நுழைந்து, சொத்துகளுக்கு சேதம் விளைவித்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பியத் நிகேசல, பலாங்கொடை காசியப்ப தேரர் ஆகியோர் நேற்று (26) பிணையில் விடுவிக்கப்பட்டனர்

கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# நமது பாதுகாப்புப் படைகள் தொழில்நுட்ப அறிவு...

வெற்றிகரமான இராணுவத்தை உருவாக்க ஒழுக்கம், பயிற்சி மற்றும் அறிவு அவசியம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அவர்கள், சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஏற்கெனவே இந்த விடயங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு ஜனாதிபதி வர்ணம் மற்றும் பல்கலைக்கழக வர்ணம் வழங்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் (25) பிற்பகல் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சேர் ஜோன் கொத்தலாவல வளாகத்தில் உள்ள நூதனசாலைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி , விசேட அதிதிகளின் நினைவுப் புத்தகத்தில் குறிப்பொன்றையும் இட்டார்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், மேலும் கூறியதாவது:

“சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் வர்ணமளிப்பு விழாவிற்கு என்னை அழைத்ததற்காகவும், முப்படையினரின் முதலாவது இராணுவ அணிவகுப்பைப் பார்வையிடுவதற்கு என்னை அழைத்ததற்காகவும் பல்கலைக்கழகத்திற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தபோது ஜோன் கொத்தலாவலவின் கந்தவல இல்லம் நினைவுக்கு வந்தது. இன்று அந்த வீட்டின் ஒரு பகுதி இருக்கிறது. சுற்றிலும் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. நான் சிறுவயதில் இந்த இடத்திற்கு வந்திருக்கிறேன். சேர் ஜோன் கொத்தலாவல எனது பெற்றோருக்கு மிகவும் நெருக்கமானவர்.

# அரசியல் சுதந்திரம் வழங்குகள்; நியமன எம்.பியாக்குவேன்

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (26) ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த சஜித் பிரேமதாஸ, நிபந்தனையுடன் கூடிய ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அரசியல் சுதந்திரம் வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை!

# தவறிவிழுந்து பெண் மரணம்

இருந்து பயணித்த பெண்ணொருவரை பொன்னாலை பாலத்தின் மீது, சைக்கிளில் இருந்து தவறி விழுந்து தரையில் தலை அடிபட்டு உயிரிழந்துள்ளார்

காரைநகர் சிவகாமி அம்மன் கோயில் பகுதியை சேர்ந்த 24 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவித்த வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# ஜப்பான் திட்டம்

எவ்வாறாயினும், இந்த பேச்சுவார்த்தையில் சீனாவின் பங்கேற்பு குறித்து தெளிவின்றி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# பால் புரைக்கேறியதில் 38 நாள் சிசு மரணம்

காலையில் தூக்கிப் பார்த்த போது மூச்சு இல்லை. விரைந்து செயற்பட்டு, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு சிசுவை கொண்டு சென்ற போதும் குழந்தை ஏற்கெனவே மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# நல்லூர் தீர்த்தோற்சவம்

மகோற்சவத்தில், நேற்று வெள்ளிக்கிழமை (26) மாலை கொடியிறக்கப்பட்டது. இன்று (27) சனிக்கிழமை(27) மாலை பூங்காவனமும் ஞாயிற்றுக்கிழமை(28) வைரவர் உற்சவமும் இடம்பெறும். (நிதர்ஷன் வினோத் )

# அரசியல் கைதிகளின் விடுதலை நாடகமாக அமைந்துவிடக்கூடாது



கூடாது என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் கருத்துகளை வெளியிட்டமைக்காக 2017, 2019 ஆம் ஆண்டுகளில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் சிலரை விடுதலை செய்து விட்டு, 12 முதல் 26 வருடங்கள் வரை சிறைகளிலுள்ள 46 அரசியல் கைதிகளின் விடுதலையை தவிர்த்துவிடக்கூடாது என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.


இதுதொடர்பில், அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

நல்லாட்சிக் காலத்தில் 217 அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்குறுதியளித்துவிட்டு, சந்தேகத்தின் பேரில் கைது செய்து வழக்குத் தாக்கல் செய்வதற்கு போதிய சாட்சியங்களற்ற 61 கைதிகளை பிணையிலும் 23 கைதிகளை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பியும் விடுதலை செய்துவிட்டதாக அன்றைய அரசாங்கம் அறிவித்திருந்தது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சட்டமா அதிபரினால் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, நீதிமன்றங்களினால் தண்டணை விதிக்கப்பட்ட அரசியல் கைதியோ அல்லது மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்குட்பட்டிருந்த அரசியல் கைதியோ அரச தரப்பினருடன் நடைபெற்ற பேச்சுவார்தைகளின் போது இன்று வரை விடுதலை செய்யப்படவில்லை எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா தெரிவித்துள்ளார்.

நல்லாட்சிக் காலத்தில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டிருந்த கைதிகள் விடுதலை செய்யப்படும்போது தற்போதைய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவே அப்போதைய நீதி அமைச்சராக செயற்பட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# 3,000 மெட்ரிக் தொன் உணவு அமெரிக்காவால் நன்கொடை




இந்த நன்கொடையானது ஒரு மிகப்பெரிய 3,000 மெட்ரிக் தொன் உணவு நன்கொடையின் ஒரு பகுதியாகும். அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங், கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த மற்றும் சுகாதார அமைச்சு, தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் Save the Children ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்நன்கொடையினைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

“அமெரிக்க மக்கள் வழங்கும் இந்த நன்கொடையானது மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய இலங்கையர்களை  அதாவது குழந்தைகளை  இலக்காகக் கொண்டுள்ளதுடன் அவர்களின் பசியை விடவும் அவர்களின் பாடசாலைக்கல்வியில் கவனம் செலுத்துவதற்கு உதவுகிறது. போசாக்கினை வழங்கும் ஒவ்வொரு வேளை உணவும், இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்டுள்ள மிகமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கு அனைத்து இலங்கையர்களுக்கும் உதவுவதற்கு அமெரிக்கா கொண்டுள்ள உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாக அமையும்” என தூதுவர் ஜூலீ சங் தெரிவித்தார்.

இந்த உணவுத் தொகுதியானது USDA McGovern-Dole சர்வதேச சிறார்களின் போசாக்கு மற்றும் கல்விக்கான உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது பசியைக் குறைப்பதன் மூலம் கல்வியறிவு மற்றும் பாடசாலைக்கான வருகையை மேம்படுத்துவதற்காக உணவுப் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு உடனடி அவசர உதவிகளை வழங்குவதை இலக்காகக் கொண்ட ஒரு ஐந்தாண்டு கால 26 மில்லியன் டொலர் செயற்திட்டமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திரௌபதி அம்மன் ஆலய கைகலப்பில் ஒருவர் மரணம்; இருவருக்கு காயம்



காயமடைந்துள்ளனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி கருணாரத்ன தெரிவித்தார். வாகனேரி திரௌபதி அம்மன் ஆலயத்தில் சடங்கு உற்சவம் இடம்பெற்று வந்தபோது, சிலருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம், கைகலப்பாக மாறியுள்ளது.

இந்த நிலையில் வாகனேரி குளத்துமடு முருகன் ஆலய வீதியினைச் சேர்ந்த நடராஜா ரமேஸ்காந்தன் (வயது 19) என்ற இளைஞர் மரணமடைந்துள்ளார். நடராஜா கணேசன் (வயது 19), தியாகராஜா திலீபன் ஆகிய இருவர் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், மற்றையவர் கிசிச்சையின் பின்னர் வீடு சென்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியுமான கருணாரத்ன தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டுமானத் தொழிற்றுறையை மீளக்கட்டியெழுப்ப வேண்டும்.

இருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும் என்றும் தெரிவித்தார்.

மேற்படி விவகாரம் தொடர்பில் தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

கட்டுமானத் தொழிலாளர்கள் முறையான தொழில் பாதுகாப்பு அங்கிகள், உபகரண பயன்பாடுகள் உள்ளிட்டவை தொடர்பில் முறையான பயிற்சி இன்றி தொழிலில் ஈடுபடுவதனால் திடீர் விபத்துகள் ஏற்படும் போது பாரியளவான உடலியல் பாதிப்புகளுக்கு உட்படுகின்றனர்.

இத்தொழிலில் ஈடுபடுவோர் சமூக பாதுகாப்பு அற்றவர்களாக காணப்படுகின்றனர். இவர்களுக்கு ஊழியர் நம்பிக்கை நிதி, ஊழியர் சேமலாப நிதி என்பன வழங்கப்படுவதில்லை. இதன்காரணமாக இவர்களது எதிர்காலம் பாதுகப்பற்றதாகி உள்ளது என்றார்.

நாட்டை உலுக்கிய கொரோனா காலம் முதல் இன்றைய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பணவீக்கம் என்பவற்றால் கட்டுமானப் பொருட்களின் விலை 60 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இதனால் பல கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இப்பணிகளில் ஈடுபட்டு வந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தொழிலை இழந்து வாழ்வாதாரம் அற்று நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர். இத்தொழிலில் ஈடுபட்டு வரும் பெண் தொழிலாளர்களும் மகப்பேற்று விடுமுறை போன்ற அடிப்படை தொழில் உரிமைகளை இழந்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

எமது சங்கம் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு இயன்ற உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. அரசாங்கம் தமது நிதியொதுக்கீட்டில் இடம்பெறும் கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கும் போது உரிய தொழில் பாதுகாப்பை வழங்கி பணிகளை நடைமுறைப் படுத்த வேண்டும் என்றார்.



## தடைகளைத் தாண்டிய
# பயணத்தை ஆரம்பிக்கலாமா?



ச. சேகர்

தெரிவு செய்யப்பட்ட 305 பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த இறக்குமதித் தடை, இந்த வாரம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்திருந்தமை தொடர்பில், சமூக வலைத்தளங்களில் பரவலாக பேசப்பட்டிருந்ததை காண முடிந்தது.

இந்த இறக்குமதித் தடைகளுக்கு எதிராகக் கருத்து வெளியிட்டிருந்த பலர், தற்போதைய ஜனாதிபதியால் தான்தோன்றித்தனமாக மேற்கொண்ட தீர்மானத்தின் விளைவாகவே, இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தனர். இதனால் நாடு மேலும் பின்னடைவை எதிர்நோக்கும் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

அந்நியச் செலாவணி இருப்பு குறைந்துள்ளமையின் காரணமாக தற்போது சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக நாடு பாதிக்கப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்ததே. இந்த நிலைக்கு யார் பொறுப்பாளிகளாக அமைந்திருந்தாலும், தற்போது நாடும், நாட்டு மக்களும் எதிர்நோக்கியுள்ள இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, அந்நியச் செலாவணி இருப்பை அதிகரித்துக் கொள்வதை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த காலப்பகுதியில், இந்நாட்டின் அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்களை இறக்குமதி செய்ய அவசியமான அந்நியச் செலாவணி நாட்டில் இருக்கவில்லை என்பதுடன், இந்தியா அடங்கலா சர்வதேச நாடுகளிடமிருந்து கிடைத்த கடன் மற்றும் நிவாரண உதவித் திட்டங்களினூடாக, இந்த அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்து கொள்ள முடிந்தது.

ஏற்றுமதி, சுற்றுலா மற்றும் தொழிற்துறை போன்றவற்றுடன் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் இந்நாட்டுக்கு அனுப்பும் வெளிநாட்டுப் பணம் போன்ற முறைகளில் இலங்கைக்கு அந்நியச் செலாவணி கிடைக்கின்றது. சுற்றுலாத் துறையின் வீழ்ச்சியின் காரணமாக, அந்நியச் செலாவணி இருப்பு பெருமளவு குறைந்தமை இந்த நெருக்கடி நிலை தோன்றுவதற்கு ஒரு பிரதான காரணியாக அமைந்திருந்தது.

அண்மைக் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களினூடாக, தற்போது சற்று திருப்திகரமான நிலை ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் இந்த வாரத்தின் முற்பகுதியில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிடுகையில் தெரிவித்திருந்தார்.

அதன் பிரகாரம் இறக்குமதி செலவீனம் குறைவடைந்திருந்தமை, அந்நியச் செலாவணி கிடைப்பனவு, ஏற்றுமதி வருமானம் கிடைப்பனவு, பணவீக்கம் நிலையான மட்டத்தை எய்தியிருந்தமை, அந்நியச் செலாவணி தட்டுப்பாடு சீரடைந்தமை போன்றவற்றை அவதானிக்க முடிந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

எரிவாயு, எரிபொருள், அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு இதனால் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் நிதித் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக குறுகிய கால கடன்களைப் பெற்று செயலாற்றக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், நாட்டின் செலவுகளை நிர்வகித்துக் கொள்ள முடிந்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

உண்டியல் போன்ற சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு பணம் அனுப்புவதில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும், அவ்வாறு அனுப்பப்படும் பணத்துக்காக செலுத்தப்படும் ரூபாயின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால், இந்நாட்டின் வங்கிக் கட்டமைப்பினூடாக அந்நியச் செலாவணி கிடைப்பதில் சற்று அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கேள்வியின் அடிப்படையில் பணவீக்கம் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், விலைகள் நிலையான மட்டத்தை எய்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

திறந்த கணக்குகளினூடாக இறக்குமதி செய்யப்படும் பொருட்களை முழுமையான நிறுத்த வேண்டும் என பரிந்துரை செய்திருந்தார். இதனூடாக, கறுப்பு சந்தையில் டொலர் பரிமாற்றம் இடம்பெறுவதை இல்லாமல் செய்வதற்கு மத்திய வங்கி முயற்சி செய்வதாக குறிப்பிட்டிருந்தார்.

இறக்குமதித் தடையை மேலும் நீடிப்பதனூடாக, இந்நாட்டில் கையிருப்பிலுள்ள அந்நியச் செலாவணியை, அத்தியாவசிய பொருட்கள் கொள்வனவுக்காக பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் என்பதுடன், உண்டியல், ஹவாலா போன்ற சட்டவிரோதமான பணப் பரிமாற்றங்களை வலுவிழக்கச் செய்து, இந்நாட்டினுள் சட்டபூர்வமான முறையில் டொலர் பரிமாற்றத்தை மேற்கொள்ளும் தற்காலிக ஏற்பாடாக அமைந்துள்ளமை புலனாகின்றது.

எரிபொருள், எரிவாயு, உணவு, மருந்துப் பொருட்கள், உரம் போன்றவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தமை இந்நாட்டு மக்கள் கடந்த காலங்களில் எதிர்நோக்கியிருந்த பிரதான பிரச்சனைகளாக அமைந்திருந்தன. அவற்றுடன் இணைந்த மேலும் பல பிரச்சனைகளும் காணப்பட்டன. அரசின் பொருளாதாரக் கொள்கையினூடாக இன்று இந்தப் பிரச்சனைகளின் பெருமளவானவற்றுக்கு ஏதேனும் வகையில் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

ஆனாலும் நெருக்கடி தீரவில்லை. மேலும் ஒரு வருட காலப்பகுதிக்கேனும் இந்த நெருக்கடியான நிலை தொடரும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, மேலும் ஒரு வருட காலப்பகுதிக்கேனும் இந்த கட்டுப்பாடுகள் நிறைந்த பொருளாதாரக் கொள்கைகள் பின்பற்றப்பட்டு, நாட்டை வழமைக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இதன் காரணமாக இறக்குமதி தடையும் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. வழமையாக இறக்குமதி தடை செய்யப்படும் போது, உள்நாட்டு உற்பத்தித் துறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி, ஏற்றுமதி வருமானமும் வீழ்ச்சியடையும் சூழல் காணப்பட்டது. அதனால், டொலர் இருப்பு குறைவடைவதாக தெரிவித்து, கண்மூடித்தனமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிக்க முடியாது.

நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகக்குறைந்த பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு மாத்திரம் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அரசின் பொருளாதாரக் கொள்கைகளினூடாக, ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவும், ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான செலவு போன்றவற்றுக்கிடையிலான இடைவெளியை ஓரளவுக்கு குறைத்துக் கொள்ளவும் முடிந்துள்ளது.

எளிமையாகக்கூறுவதானால், எம் வீட்டில் வருமானம் மட்டுப்பட்டு, நிதி நெருக்கடியான சூழலுக்கு முகங்கொடுக்க நேரிட்டால், வழமை போல நாம் முன்னெடுத்த வாழ்க்கைமுறையை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது. மீண்டும் வருமானமீட்டக்கூடிய நிலை வரும் வரை, அநாவசியச் செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்வோம். இதை நாம் அனைவரும் அறிந்ததே. உணவருந்திய பின்னர் இனிப்புப் பண்டமொன்றை உட்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தால், தற்போது இந்த இனிப்புப் பண்டத்தை தவிர்க்க வேண்டிய நிலை எழுந்துள்ளது. சோற்றுடன் நான்கு அல்லது ஐந்து கறி வகைகளை உண்டால், அதை தற்போது மூன்றாக குறைக்க வேண்டியுள்ளது. அவ்வாறான அர்ப்பணிப்புகளை மேற்கொள்ளாமல், நாளைய உணவு வேளைக்காக பணத்தை சேமித்துக் கொள்ள முடியாது.

நாடும் இவ்வாறானதொரு நிலைக்கு முகங்கொடுத்துள்ளது. செலவுகளை இயலுமானவரை குறைந்து, மீண்டும் வருமானமீட்டக்கூடிய வழிமுறைகளை ஏற்படுத்திக் கொள்வதை தற்போது மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஆனாலும், இந்தச் செயற்பாட்டை நிர்வகித்து சிறந்த தீர்வை தேடிக் கொள்வதற்கு அனைவரிடத்திலும் ஒற்றுமை இன்மையை காண முடிகின்றது. இறக்குமதி தடை செய்யப்படும் போது, நாடு வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது என மக்களை தூண்டும் வகையில் பிரச்சாரங்களை மேற்கொண்டால், இந்த செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது. அத்தியாவசியமற்ற இந்த தேவைகளுக்காக நாட்டில் எஞ்சியிருக்கும் பணத்தை பயன்படுத்துமாறு அரைகூவல்களை மேற்கொண்டால், நாட்டின் எதிர்காலம் இன்னும் மோசமானதாகவே இருக்கும்.



ஒப்பன் டிக்கெட்

# ‘மிஸ்டர் டெமோகிரசி’ புதிய அர்த்தம் கற்பிக்கிறார்



ஆர். யசி
yasiharany@gmail.com

எது பயங்கரவாதம்? அரசாங்கத்துக்கு எதிரான ஜனநாயக போராட்டங்கள் பயங்கரவாதமா? அல்லது ஜனநாயக போராட்டங்களை அடக்கும் செயற்பாடுகள் பயங்கரவாதமா? அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்து கொடுக்க முடியாத அரசாங்கத்தை எதிர்த்தும், வாழ்வாதாரத்தை சுரண்டும் ஆட்சியாளர்களை எதிர்த்தும் மக்கள் வீதிக்கு இறங்கி நியாயம் கேட்டால், அதனை அரச விரோத செயற்பாடாக கருதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுக்கின்றனர் என்ற மிகப்பெரிய குற்றச்சாட்டு சகல தரப்பில் இருந்தும் எழுந்துள்ளது. ஏன் இந்த போராட்டங்கள்? மக்கள் தமக்கான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாது, நாட்கணக்கில் வரிசையில் நிற்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டதன் வெளிப்பாடாகவும், பொறுமை இழந்த மக்கள் தானாக போராட்டத்தில் குதித்ததன் காரணமாகவும் உருவானதே. மாறாக எந்தவொரு வெளி சக்தியினதும் ஆக்கிரமிப்போ அல்லது சட்டவிரோத, பயங்கரவாத செயற்பாடுகளின் பின்னணியோ இதில் இருக்கவில்லை. சீர்திருத்தம் குறித்து அரசாங்கம் பலமுறை உறுதியளித்த போதிலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் இருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை அடுத்து இலங்கை அரசாங்கம் கடுமையான சர்வதேச பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. இதற்கு முன்னர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உற்பட பலர் கைது செய்யப்பட்டனர், கடந்த மூன்றுமாத காலத்தில் 109 கைதுகள் இடம்பெற்றுள்ளன. ஆகவே தான் இந்த கைதுகள் குறித்து உள்நாட்டு மனித உரிமை சார் அமைப்புகள், தனி நபர்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் தூதரகங்கள் என பல்வேறு தரப்பினர் கொந்தளிக்கவும் காரணமாக அமைந்துவிட்டது.

போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கு கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்துவது இலங்கை அரசாங்கத்துக்கு ஒரு புதிய வீழ்ச்சியாகும். அரசாங்கம் ஏற்கனவே மிகவும் விமர்சிக்கப்பட்ட ஒரு சட்டத்தை ஆயுதமாக்குகிறது, அது உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகின்ற நிலையில், “அதிகாரிகள் எந்த விதமான விமர்சனங்களையும் தாங்கிக் கொள்ளத் தயாராக இல்லை, எதிர்ப்புக் குரல்களை ஒடுக்குகிறார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாகும். இது இலங்கையின் சர்வதேச மனித உரிமைக் கட்டமைப்புக்கும் எதிரானது, குறிப்பாக கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைகள் முழுமையாக மழுங்கடிக்கப்படுகின்றன” என சர்வதேச மன்னிப்பு சபையும், ஐரோப்பிய ஒன்றியமும் தமது கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தினர். இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதுவர்கள் பலரும் கூட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி வலியுறுத்தியுள்ளனர். இலங்கையின் அண்மைக்காலங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தப்படுவதாக வெளியான தகவல்கள் குறித்து கவலையடைந்துள்ளதாகவும், இச் சட்டமானது, மனித உரிமைகளுக்கான மதிப்பிற்கு முரணான விடயம் எனவும், இச் சட்டத்தை பயன்படுத்துவதில்லை என்ற உத்தரவாதத்தை அதிகாரிகள் பின்பற்றவேண்டும் எனவும் , இது இலங்கையின் ஜனநாயகத்தை முழுமையாக அழித்துவிடும் எனவும் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜுலி சங், பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன், நோர்வே தூதுவர் ட்ரைன் எஸ்கடெல், கனடா தூதுவர் டேவிட் மக்கினன் ஆகியோரும் தெரிவித்திருந்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம், 1979ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட போதே, அரசியல் அமைப்பிற்கு எதிரான சட்டம் என அரசாங்கம் கூறியிருந்ததுடன், அதனை நீதி மன்றத்திற்கு அறிவித்து தற்காலிக சட்டமாக ஆறு மாதங்களுக்கு மாத்திரமே எனக் கூறியே நடைமுறைப்படுத்தினர். எனினும் 1982 ஆம் ஆண்டு நிலையான சட்டமாக இது மாற்றப்பட்டதுடன் அன்று தொடக்கம் இன்று வரை நாற்பது ஆண்டுகளாக வெவ்வேறு காரணங்களை கூறி இந்த சட்டத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளனர். பிரேமதாஸ, சந்திரிக்கா, மஹிந்த, மைத்திரி -ரணில் கூட்டணி, கோட்டாபய என சகல ஆட்சியாளர்களுமே இந்த சட்டத்தை தமக்கு ஏற்றால்போல் பயன்படுத்தினர் என்பதை நிராகரிக்கவே முடியாது. அதுமட்டுமல்ல, நாட்டின் சட்டதிட்டங்களுக்கும், சர்வதேச நியதிகளுக்கும் இது முரணானது என தொடர்ச்சியாக சர்வதேசம் வலியுறுத்தியும், அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுத்தும் கூட, சர்வதேசத்தை சமாளிக்க ஒவ்வொரு பொய்களை கூறிக்கொண்டு இந்த சட்டத்தை உயரிய மட்டத்தில் பயன்படுத்தி அடக்குமுறைகளை கையாண்டனர் என்பதே உண்மை.

இச்சட்டம் கொண்டுவரப்பட்ட காலம் தொடக்கம் தமிழ் மக்களே அளவுக்கு அதிகமாக பாதிக்கப்பட்டனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற பெயரில் அப்பாவிகள் பலர் தண்டிக்கப்பட்டனர். பலர் இன்றும் சிறைகளில் நீண்டகாலமாக அரசியல் கைதிகளாக உள்ளனர். பின்னர் முஸ்லிம்களுக்கு எதிராகவும் பாய்ந்த சட்டம் இன்று அரசாங்கத்தை எதிர்க்கும் சகலருக்கு எதிராகவும் பாகுபாடின்றி நடைமுறைப்படுத்தப்படுகின்றது . உன்மையிலேய அவசரகால சட்டத்தை இப்போது பயன்படுத்த முடியாதுள்ளது, ஏனென்றால் நீதிமன்றம் அதில் அளவுக்கு அதிகமாக தலையிடுகின்றது. ஆகவேதான் அவசரகால சட்டத்தை அவ்வாறே கைவிட்டுவிட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசாங்கம் கையில் எடுத்துள்ளது. மிக அழகான சித்திரம் ஒன்றை வரைந்து, அதனை வைத்துகொண்டு நாட்டை அதற்கமைய முன்னோக்கி கொண்டு செல்கிறோம் என்ற அரச தலைவர்களின் கதைகளுக்கு இலங்கையில் எப்போதுமே பஞ்சம் இருந்ததில்லை. 1978ஆம் ஆண்டில் இருந்து இலங்கையை கட்டமைக்கும் விதம் குறித்தும் இதற்கு முன்னர் 25 அக்கிராசன உரைகளை நாம் கேட்டுள்ளோம், அந்த வரிசையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக ஆற்றியது 26வது அக்கிராசன உரையாகும். இறுதியாகக் கூட மனித உரிமைகளை பலப்படுத்தும் கதைகளை ரணில் கூறினாரே தவிர அதனை நடைமுறைப்படுத்த தவறிவிட்டார். 2017ஆம் ஆண்டில், அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க பிரஸல்ஸ்க்கு சென்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்ற வாக்குறுதியை கொடுத்து, ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையை பெற்றுக்கொண்டார். அதுமட்டுமல்ல,பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரையிலும் அந்த சட்டம் பயன்படுத்தப்படாது என்ற வாக்குறுதியும் வழங்கப்பட்டது. இந்த வாக்குறுதியை நம்பியே ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையையும் கொடுத்தது. ஆனால் ஐந்து ஆண்டுகளுக்கு பின்னரும் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இன்று ஜனாதிபதியாக அதிகாரத்தில் இருக்கின்ற வேளையில், அவரினால் இடப்பட்ட கையெழுத்தும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் மூவருக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை நடத்த வேண்டும் என்பதுதான்.

ஆகவே, மனித உரிமை ஆணைக்குழு கூட்டங்களில், இலங்கையின் ஜனாதிபதி ஆசனங்களில் இருப்பவர்களினால் மனித உரிமைகள் மீறப்படுகின்றன எனக் கூறி வாதிட்ட நபர் இன்று அதே ஆசனத்தில் இருந்துகொண்டு மனித உரிமைகளை மீறுவது எந்தளவு நியாயமானது என்பதை தாண்டி, இதுதான் ஆட்சியாளர்களின் பண்பா என்ற கேள்வியையும் கேட்க வேண்டியுள்ளது. மிஸ்டர் டெமோகிரசி என இவ்வளவு காலமாகவும் கூறிகொண்டிருந்த ரணில் இன்று அதன் அர்த்தத்தை மாற்றியுள்ளார், அல்லது அதற்கு புதிய அர்த்தம் கற்பிக்க நினைக்கிறார் என்றும் கூறலாம். கடந்த காலங்களில் இருந்தே பயங்கரவாதத் தடைச் சட்டதை நீக்க வேண்டும் என்பதை சர்வதேச நாடுகள் ஆணித்தனமாக வலியுறுத்திக்கொண்டுள்ள நிலையிலும், மனித உரிமைகளை பலப்படுத்த வேண்டும் என தொடர்ச்சியாக வலியுறுத்து வருகின்ற நிலையிலும், அரசாங்கம் இவ்வாறு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வேட்டையாடுவது ஏற்றுகொள்ள முடியாத விடயமாகும். இன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள எவருமே பயங்கரவாதிகள் அல்ல. அவர்களின் பின்னணியல் எந்த ஆயுத கலாசாரமும் இல்லை, தமது உரிமையை வலியுறுத்தி ஜனநாயக ரீதியில் போராடியவர்களை இவ்வாறு கைது செய்வது எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. ஒரு பக்கம் நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்துக்கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தை நாடவும் ஏனைய ஐரோப்பிய நாடுகளின் நிதி உதவிகளையும் பொருளாதார சலுகைகளையும் பெற்றுக்கொள்ள நாட்டில் பல்வேறு ஜனநாயக மாற்றங்களை செய்ய வேண்டியுள்ளது. மறுபக்கம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இம்முறை இலங்கையை பல்வேறு விதத்திலும் நெருக்கப்போகின்றது. இந்த நிலையில் அரசாங்கம் தானாகவே மண்ணை வாரி தலையில் போட்டுக்கொள்கின்றது என்பது வெளிப்படையாக தெரிகிறது. ராஜபக் ஷ அரசாங்கம் மீதான தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, மனித உரிமைகளை பலப்படுத்த வேண்டும் என வலியுறுத்தும் முக்கிய தலைவர் ஒருவர் ஆட்சிக்கு வந்து, அவரும் மனித உரிமைகளை மீறுவதை ஒருபோதும் ஏற்றுகொள்ள முடியாது என்பதே மனித உரிமை ஆர்வலர்களின் கருத்தாகவும் உள்ளது.

கல்முனை வடக்கு

# பிரதேச செயலகத்தை காணவில்லை

## அரசியல்வாதிகள் காட்டம்; மக்கள் கொதிப்பு



வி.ரி சகாதேவராஜா

அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு செயலகமும் 29 கிராம சேவையாளர் பிரிவுகளும் நீக்கப்பட்டு இருக்கின்றன. இது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய உணர்வலைகளை தோற்றுவித்திருக்கின்றன.

இது தொடர்பாக, உணர்வுள்ள சில அரசியல்வாதிகள் வழமைபோல காட்டமான அறிக்கைகளை வெளியிட்ட வண்ணமிருக்கின்றனர். மக்களும் வழமைபோல ஆக்ரோஷமாக கருத்துகளை வெளியிட்டு, கொதிப்பில் உள்ளனர்.

இந்நிலையில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணை செயலாளர் அ.நிதான்சன் ஆகியோர் வாய்திறந்துள்ளனர்.



தவராசா கலையரசன்



கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில்

### கலையரசன் எம். பி.

"அரச வலைத்தளத்தில் இருந்து எமது பாரம்பரிய கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நீக்கப்பட்டு இருப்பது தொடர்பாக, தமிழ் மக்கள் கொதிப்படைந்துள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் காட்டமாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த விடயம், மேலும் மேலும் கல்முனை தமிழ் மக்களுக்கு மாத்திரம் அல்ல, ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனங்களையும் புண்பட செய்திருக்கின்றது; கொதிப்படையை செய்திருக்கின்றது. ஒற்றுமை பற்றி பேசிக்கொண்டு, இன்னும் இந்த வேற்றுமை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக செய்து வருகின்ற அந்தக் கயவர்களின் செயற்பாடு நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாங்களும் அதே பாணியிலேயே செயற்பட நிர்ப்பந்திக்கப்படுவோம். நாங்கள் எவ்வளவுதான் ஒற்றுமையாக வாழ வேண்டும், ஐக்கியமாக, சமாதானமாக வாழ வேண்டும் என்று பல முயற்சிகள் எடுத்த போதிலும், தொடர்ச்சியாக சில இனவாதிகள் அதனை அலட்சியம் செய்து வருவது ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு வழி வகுக்காது என நினைக்கின்றேன். எனவே இந்த விடயத்தில், சம்பந்தப்பட்டவர்களோடு பேசி கடுமையான நடவடிக்கை எடுக்க இருக்கின்றேன். என்னிடம் கல்முனையை சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் இது தொடர்பாக தொடர்ச்சியாக ஆத்திரத்தோடு முறையிட்டு வருகின்றார்கள். பலர் நேரடியாக வந்து, தமது கண்டனங்களை உணர்ச்சி வசப்பட்டு தெரிவிக்கின்றார்கள்.

இதனை இன்னும் நீங்களும் உங்கள் கட்சியும் வெறுமனே பார்த்துக் கொண்டு இருப்பது ஏன் என ஆக்ரோஷமாக கேட்கிறார்கள். எனவே, இதனை சாதாரணமாக நான் எடுத்துக் கொள்ள முடியாது. எனது கட்சியின் தலைவர் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் இது தொடர்பாகத் தெரிவித்து இருக்கின்றேன். விரைவில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

### தவிசாளர் ஜெயசிறில்..

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக, காணி பதிவகத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட காணி பதிவக உரிமை மறுக்கப்பட்டது. அதேவேளை, இவ்வாரம் அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக 29 கிராம சேவையாளர் பிரிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. எந்த அடிப்படையில் இது நியாயம்? இவ்வாறு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "1993 ஆண்டு முதல் முழு அதிகாரத்தோடும் இயங்கி வந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை, வர்த்தமானி அறிவித்தல் இல்லை எனக் கூறி, துண்டாக துண்டாக கூறுபோட்டு வருகின்றார்கள்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துக்கு இதுவரையில் வர்த்தமானி அறிவித்தல் இல்லை. ஆனால் சுயாதீனமாக இயங்குகின்றது.

ஆனால், இன்று 29 கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி, செயற்படும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சுயாதீன தன்மையை இல்லாதொழிக்கஈ மிகத் தீவிரமாக இனவாத அரசியல்வாதிகளும் இனவாத அமைப்புகளும் செயற்படுகின்றன.இதற்கு அரச அதிகாரிகளும் துணை செல்கின்றனரா?

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக, காணி பதிவகத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட காணி பதிவக உரிமை மறுக்கப்பட்டது. அதேவேளை, இன்று அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக 29 கிராம சேவையாளர் பிரிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. எந்த அடிப்படையில் இது நியாயம்?

அதேவேளை ஒன்றைச் சிந்திக்க வேண்டும். உப பிரதேச செயகலமான தோப்பூர் பிரதேச செயலகத்துக்கு இலக்கமிடப்பட்டு, அவை அமைச்சின் அரச வலைத்தளத்தில் காட்டப்படுகின்றது. இது அரச கட்டமைப்பில் இனவாத அரசியல் தலையீட்டின் உச்சம் என்றே சொல்ல வேண்டும். பாகுபாட்டுடன் தொடர்ந்து, கல்முனை மக்கள் புறக்கணிக்கப்பட்டு நடத்தப்படுமானால் இன நல்லிணக்கம் என்ற சொல்லை தேடிச் செல்ல வேண்டி நிலை ஏற்படும். கல்முனை மக்களின் மனநிலை மிக கொதிப்படைந்துள்ளது. விரைவில் இதற்கான முடிவு ஒன்றினை பெற வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்" என்றார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணி துணைச்செயலாளர் நிதான்சன்

கல்முனை வடக்கு பிரதேச செயலகம், தன் அதிகாரத்தை உபயோகிக்க முட்டுக்கட்டை இடும் நபர்கள், வடக்கு - கிழக்கு இணைய இணங்குவார்கள் என்பது தமிழ்த் தேசிய கட்சிகளின் பகல் கனவே ஆகும்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வடக்கு - கிழக்கு இணைப்பு எனும் நோக்கோடு சிறுபான்மை சமூகமாக ஒன்றிணைய வேண்டும் எனவும் அதன் ஊடாக தமிழ் பேசும் சமூகம், ஒற்றுமை என்று தமிழ் தலைவர்கள் பேச, தவில் அடிப்பது போன்று கிழக்கில் தமிழர் அடிக்கப்பட்டு கொண்டு இருக்கின்றனர்.

1993 ஆண்டு முதல்ஈ முழு அதிகாரத்தோடும் இயங்கி வந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை, வர்த்தமானி இல்லை எனக் கூறி, துண்டுதுண்டாகச் சிதைக்கின்றனர். மூன்று தசாப்தத்திற்கு மேல் இன்று பிரதேச செயலகம் எனும் நிர்வாக அலகின் அதிகாரம், முழுமையாக இன்னொரு பிரதேச செயலகத்தின் வரம்பு மீறிய செயலால் பாதிக்கப்பட்டு வருகின்றது. காரணம் கேட்டால், பிரதேச செயலகம் எனும் வர்த்தமானி இல்லை என கூறுகின்றனர். குறிப்பாக, கோறளைப்பற்று மத்திக்கு இதுவரையில் பிரதேச செயலகத்துக்கு வர்த்தமானி இல்லை. ஆனால், சுயாதீனமாக இயங்குகின்றது. ஆனால், இன்று 29 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி செயற்படும் பிரதேச செயலகத்தின் சுயாதீன தன்மையை, இல்லாதொழிக்க மிகத் தீவிரமாக இனவாத அரசியல்வாதிகளும் இனவாத அமைப்புகளும் செயற்படுகின்றன. இதற்கு அரச அதிகாரிகளும் துணை செல்கின்றனரா?


நேற்று முன் தினம், அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக 29 கிராம சேவகப் பிரிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. எந்த அடிப்படையில் இது நியாயம்? அதேவேளை ஒன்றைச் சிந்திக்க வேண்டும்; உப பிரதேச செயகலமான தோப்பூர் பிரதேச செயலகத்துக்கு இலக்கமிடப்பட்டு, அவை அமைச்சின் அரச வலைத்தளத்தில் காட்டப்படுகின்றது. இது அரச கட்டமைப்பில் இனவாத அரசியல் தலையீட்டின் உச்சம் என்றே சொல்ல வேண்டும். பாகுபாட்டுடன் தொடர்ந்து கல்முனை மக்கள் புறக்கணிக்கப்பட்டு நடத்தப்படுவார்களானால், இன நல்லிணக்கம் என்ற சொல்லை தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். கல்முனை மக்களின் மனநிலை மிகவும் கொதிப்படைந்துள்ளது. விரைவில் முடிவு ஒன்றினை பெற, நாம் ஒற்றுமையாக வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

மேலும், இவ்வாறு இம்சை தரும் நடவடிக்கைகளுக்கு இறுதி முடிவு எட்டப்படும் காலம் விரைவில் என்பதனை இனவாத அரசியல்வாதிகள் ஞாபகம் வைத்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஒற்றுமைக்காக மட்டுமே குரல் கொடுத்து வருகின்றது. ஆனால் இனவாதம் தலைதூக்க இனி ஒரு போதும் இடமளியோம்" என்றார்.




# "வாழ வழி இல்லை"

## அமைதிபுரம், ஆரோக்கியபுரம் கிராம மக்கள் ஆதங்கம்



சுப்பிரமணியம் பாஸ்கரன்















சுத்தமான குடிநீர் இல்லை; போக்குவரத்து வசதிகளில்லை; வாழ்வாதாரத்துக்கு பயிர் செய்வதற்குரிய காணிகள் இல்லை; வருமானத்துக்கான வழிவகைகள் இல்லை; அன்றாடம் காட்டு யானைகளின் தொல்லை எனப் பல்வேறு நெருக்கடிகளோடும் தேவைகளோடும் அமைதிபுரம், ஆரோக்கியபுரம் ஆகிய கிராம மக்கள் வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் பிரிக்கும் எல்லை பிரதேசமான அக்கராயன், திருமுருகண்டி வீதியின் அம்பலப்பெருமாள் சந்திக்கு அடுத்தபடியாக இரண்டு கிராமங்களும் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் 24 கிராம அலுவலர் பிரிவில் மேற்படி அமைதிபுரம், ஆரோக்கியபுரம் ஆகிய இரண்டு கிராமங்களும் அமைந்துள்ளன.

இந்த இரண்டு கிராமங்களிலும் பெண்தலைமைத்துவ குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளை கொண்ட குடும்பங்கள், வயோதிபர்களைக் கொண்ட குடும்பங்கள் உள்ளடங்களாக 147 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன.

இவர்களில் 19 பேர் மாத்திரமே சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் சிற்றூழியர்கள் என அரச உத்தியோகத்தர்களாக காணப்படுகின்றனர். அத்துடன் 51 வரையான குடும்பங்களுக்கு மாத்திரமே, வருடாந்தம் போக பயிர் செய்கை மேற்கொள்ளக்கூடிய வயல் காணிகள் காணப்படுகின்றன.

இவர்கள் தவிர ஏனைய அரைவாசிக்கும் மேற்பட்ட குடும்பங்கள், வாழ்வாதாரமாக விவசாயத்தை செய்வதற்கான காணிகளையோ அல்லது, வேறு ஏதாவது வருமானத்தை பெறுவதற்கான வழிவகைகளைக் கொண்டிருக்கவில்லை.

இதனால், இவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலும் வறுமையிலும் வாழ்கின்றனர் என பிரதேச மக்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

அடுத்ததாக, இந்தக் கிராமத்தில், குடிநீரும் மிக பெரிய பிரச்சினையாக காணப்படுகிறது. சுத்தமான குடிநீர் பெற முடியாத நிலைக்குக் காரணம், கிணறுகள் யாவும் உவர் நீர் கிணறுகளாகவே காணப்படுகின்றன.

இவற்றில் இரண்டு கிணறுகளில் இருந்து மாத்திரமே, குடிநீர் பெற்றுக்கொள்ள கூடியதாக உள்ளது. அதுவும் வருடத்தில் ஜூன் மாதம் முதல் அக்டோபர், நவம்பர் மாதம் வரையான காலப்பகுதிகளில், இந்தக் கிணறுகளில் இருந்தும் குடிநீர் பெற்றுக்கொள்ள முடியாது. நீர் வற்றி, வறண்டு காணப்படும்.

இந்தக் காலப்பகுதிகளில் அனர்த்த முகாமைதுவ பிரிவு, பிரதேச சபை ஆகியவற்றால் குடிநீர் வழங்கப்படுவது வழமை. ஆனால், தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற எரிபொருள் நெருக்கடி காரணமாக, இந்தப் பிரதேசங்களில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இங்கே அமைந்துள்ள பாடசாலைக் கிணற்றில், பாசிகள், புற்கள் வளர்ந்து தண்ணீரைக் காணமுடியவில்லை. இவ்வாறு, குடிநீர் நெருக்கடி, பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ள வைத்துள்ளது.

அடுத்து, இரண்டு கிராமங்களிலும் நிர்வாக அலகுகள் துணுக்காய் பிரதேசத்தில் காணப்படுவதால், மாதாந்த கொடுப்பனவுகள், முதியோருக்கான கொடுப்பனவுகள், சமுர்த்தி கொடுப்பனவுகள் பெறுவதாக இருந்தால், 23 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள துணுக்காய் செல்ல வேண்டும். அதற்கான போக்குவரத்து வசதிகளில்லை; அதனால், அக்கராயன் அம்பலபெருமாள் சந்தியில் இருந்து, கிளிநொச்சி சென்று, அதன் பின்னர் அங்கிருந்து மாங்குளம் சென்று, அதன் பின்னர் துணுக்காய்க்கு மூன்று பஸ்களில் பயணம் செய்து, தங்களுடைய தேவை நிறைவேற்றி மீளவும் அந்த மூன்று பஸ்களில் பயணித்து, அவர்கள் வீடுகளுக்கு வந்து சேர வேண்டிய அவலநிலைமையும் தொடர்கின்றது.

ஆரோக்கியபுரம், அமைதிபுரம் ஆகிய கிராமங்களில் வாழும் சுமார் 147 வரையான குடும்பங்கள், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இவ்வாறு தமது கிராமத்தில் குடிநீரின்மை, போக்குவரத்து வசதிகளின்மை, காட்டு யானைகளின் தொல்லை எனப் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வாழ்வதாக தெரிவித்துள்ளனர்.

இவையெல்லாம், கடந்த பத்து ஆண்டுகளாக கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்டு வந்தாலும் எதற்கும் இதுவரை தீர்வு எட்டியதாக இல்லையென இந்த மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

# முறையற்ற கழிவு முகாமைத்துவம்

## சர்வமத இளையோர்களின் விழிப்புணர்வு



அ. அச்சுதன்



சர்வமத இளையோர்களின் ஒத்துழைப்பில் நல்லிணக்கத்தினைக் கட்டியெழுப்பும் வகையில் திருகோணமலை நகரசபைக்கு உட்பட்ட சமுத்திராகம கரையோர பகுதியில் கரையோரத்தை சுத்தப்படுத்தும் நிகழ்வு வியாழக்கிழமை (18) இடம்பெற்றது.

விழுது நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற நந்நிகழ்வில் 'கழிவு முகாமைத்துவத்தினூடாக தொற்று நோய்களின் பாதிப்பிலிருந்து குறைத்துக் கொள்ளவும் அருகிவரும் உயிர் பல்வகைமையான மானினங்களை பாதுகாக்க ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளில் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சிறப்பு நிகழ்வில், மான்களை பாதுகாப்பது மானுடத்தின் பொறுப்பு போன்ற வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களும் அப்பகுதியில் இதன் போது விழிப்புணர்வுட்டப்பட்ட நிலையில் ஒட்டப்பட்டது.

சர்வமத இளையோர்களும் ஒன்று சேர்வோம் என்ற தொனிப்பொருளின் கீழ் திருகோணமலை நகர சபைக்கு உட்பட்ட சமுத்திராகமப் பகுதியில் மான்கள் பூங்கா என்று அழைக்கப்படும் பகுதியில் விழுது நிறுவனத்தால் இரண்டாவது செயற்றிட்டமாக இந் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டமை முக்கியத்தும் மிக்கதாகும்.

திருகோணமலையானது மலைகளின் அழகையும் கடல் கரையோரத்தின் வனப்பினையும் ஒன்றுசேர அழகு சேர்க்கும் இடமாகச் சிறப்புப்பெறுகின்றது. அவ்வாறானதொரு பிரதேசத்திலே முறையற்ற கழிவு முகாமைத்துவத்தால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் விழுது இளையோர்கள் மற்றும் அப்பகுதியினைச் சேர்ந்த ஏனைய இளையோர்களும் இந்நிகழ்வில் ஆர்வத்துடன் பங்குபற்றியதுடன் அங்குள்ள மான் பூங்காவில் உள்ள கழிவுகளை தரம்பிரித்து, சேகரித்து, திருகோணமலை நகரசபையின் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டது.

அத்துடன் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கழிவு முகாமைத்துவப்பணியில் ஊக்குவிப்பதற்காக அப்பகுதிக்குப் பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர்களும் திருகோணமலை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி விஜயகுமார், அவ்விடத்திற்கு வருகை தந்து இளையோரின் இத்தகைய செயற்பாடுகள் குறித்த பாராட்டியதுடன் அங்குள்ள சுற்றப்புறச்சூழல் தொடர்பாகவும் கழிவு முகாமைத்துவத்தின் அவசியம் பற்றியும் குறிப்பிட்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், "இலங்கை அரசாங்கம் பொருளாதார நெருக்கடியிலும் கூட, கழிவு முகாமைத்துவத்திற்கென அதிகளவிலான நிதியை ஒதுக்கீடு செய்கின்ற போதிலும் பொதுமக்கள் இது குறித்து பாராமுகமாகவே இருக்கின்றனர். இதனால் இப்பகுதியில் தொற்றுநோய்கள் பரவும் வீதம் மிக அதிகமாகவே காணப்படுவதுடன் பாதுகாப்பற்ற முறையில் கழிவுகள் கொட்டப்படுவதால் இங்கு வாழும் மான்களுக்கும் உயிர் அச்சுறுத்தலை உண்டுபண்ணும் விடயமாக அமைந்துள்ளது" என குறிப்பிட்டார்.

மேலும் அங்கு வருகை தந்திருந்த பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்பில் அங்குள்ள மான்கள் நீர் அருந்துவதற்கென



அமைக்கப்பட்ட தொட்டிகள் சுத்தம் செய்யப்பட்டன. மேலும் திருகோணமலை நகர சபையின் சுகாதார ஊழியர்கள், இளையோர்களோடு இணைந்து தமது பூரண ஆதரவை வழங்கியிருந்தனர்.

சரித்திரப் புகழ்பெற்ற திருகோணமலைக்கு அழகையும் சிறப்பையும் பெருமையையும் மேலும் மெருகூட்டுவது இந்தத் திருக்கோணேசர் ஆலய மான்களாகும். இவை இப் பிரதேசத்தின் பெரும் சொத்தாகும். காட்டில் மனிதரைக் கண்டவுடன் ஓடி ஒழியும் புள்ளிமான்கள், திருகோணமலை நகரில் மனிதர்களுடன் மனிதர்களாக நடமாடுவது அதிசயமே!

முன்னைய காலத்தில் கோணேசர் ஆலயப்பகுதி மற்றும் பிரட்ரிக் கோட்டைக்குள் இருந்த மான்கள் உணவு நீர்த் தேவைக்காக நகர் முழுவதும் அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளமை பெரும் அவலமே! இதனால் அவற்றின் வாழ்வு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றது.

உணவுடன் சேர்த்து பொலித்தீனை உண்ணல், விலங்குகளுக்கு ஒவ்வாத உணவுகளை உண்ணல், நாய்களால் தாக்கப்படுதல், வீதி விபத்துக்கு உள்ளாதல் என ஏகப்பட்ட பிரச்சினைகளை இவை எதிர்நோக்குகின்றன.

எனவே, இவை பாதுகாக்கப்பட வேண்டுமாயின் நகருக்குள் வருகைதராமல் கட்டுப்படுத்த வேண்டும். திருகோணமலை நகர சபை துரிதமாகச் செயற்பட்டு பிரட்ரிக் கோட்டைக்குள்ளும், திருகோணமலை முற்றவெளிக்குப் பின்புறமும், சங்கமித்தை விகாரைக்கு அருகில் தற்போது உள்ள இடத்தையும் மேலும் விரிவுபடுத்தி மான்களுக்கான பூங்காக்களை மேலும் உருவாக்க வேண்டும்.

திருகோணமலை மாவட்டமானது சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாகும். அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ள சுற்றுலாக் கைத்தொழில் விருத்தியானது ஒருவிதத்தில் பிராந்திய ரீதியிலான பொருளாதாரத்திற்குப் பங்களித்தாலும் மறுபுறத்தில் ஓர் உயிர்ப்பல்வகைமையையே அழிவுக்குக் கொண்டு செல்லும் முக்கிய காரணியாகவும் மாறியுள்ளது.

இங்கு முக்கியமான கழிவுகளாக திண்மக்கழிவுகளான பிளாஸ்டிக் அதிகளவில் கொட்டப்படுவதால் அவற்றினை உணவு என நினைத்து உட்கொள்ளும் மானினங்கள் அழிவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.



பிளாஸ்டிக்கினை எடுத்து நோக்கினால் அவை உக்குவதற்கு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் எடுக்கின்றது. அப்படியானால் நாம் எத்தனை தலைமுறையினரை தின்றும் கொன்றும் அழித்துக்கொண்டிருக்கின்றோம் என்பதை ஒருநிமிடம் சிந்திக்க வேண்டும்.

உலகத்தைப் பொறுத்தவரையில், இயற்கையைப் பாதுகாப்பது ஓர் இனத்தின் பொறுப்பு அல்ல; ஒரு மதத்தின் பொறுப்பும் அல்ல; இது மனிதத்தின் பொறுப்பு என்பதை கூற வேண்டியுள்ளது. அந்த வகையில் அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களுமே ஒன்றுகூடி, இக்கழிவு முகாமைத்துவத்தில் ஈடுபட்டதோடு, இச் சமுத்திரகமப் பிரதேசத்தினைச் சேர்ந்த இளையோர் மற்றும் பொது மக்களும் இந் நிகழ்வில் கைகோர்த்திருந்தனர் என்பதும் குறிப்பிட்டுக் கூற வேண்டிய விடயமாகும்.

முறையற்ற கழிவு முகாமைத்துவத்தால் ஏராளமான தொற்றுநோய்கள் ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. கரையோரப் பகுதிகளில் அதிகளவிலான மருத்துவக்கழிவுகள் அதிகளவில் அடங்கியிருப்பதன் காரணமாக தொற்றுநோய்கள் பரவுவதற்கான வாய்ப்புகளும் அதிகமாகவே காணப்படுகின்றன. ஆகவே இது தொடர்பாக கவனம் செலுத்தவேண்டிய தேவை எமது இளையோரிடத்திலே காணப்படுகின்றது. கழிவு முகாமைத்தவம் தொடர்பான தெளிவான அறிவினைப்பெற்றிருக்க வேண்டும். அது தொடர்பான விழிப்புணர்வு அடைந்தால் மாத்திரமே, எமது சமூகத்திலிருந்து ஏற்படக்கூடிய தொற்றுநோய்களாகட்டும் அல்லது உயிர்ப்பல்வகைமையிலே ஏற்படக்கூடிய அச்சுறுத்தலாகட்டும் அனைத்தையுமே பாதுகாக்க முடியும்.

பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கமானது இற்றைவரைக்கும் 41,415 உயிரினங்களினை சிவப்பு பட்டியலிட்டு குறிப்பிட்டுள்ளது. அதேநேரத்தில் 16,106 உயிரினங்கள் இற்றைவரை அருகிவரும் உயிரினங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு முறையற்ற கழிவு முகாமைத்தவ நடவடிக்கைகளால் இதனது தாக்கம் மேலும் அதிகரித்த வண்ணமேயுள்ளது. இத்தகைய நிலைமை தொடருமானால் குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள்ளே இவ்உயிரினங்கள் உலகிலே அழிவடைந்த உயிரினங்களாக மாறிவிடும் அபாயம் உள்ளது.

ஆகவே இது தொடர்பான தெளிவான அறிவினைப் பெறுவதன் ஊடாக, அருகிவரும் உயிரினங்களையும் காத்து, எமது அடுத்த சந்ததிக்கும் இயற்கையை விட்டுவைக்க முடியும். அப்போது தான் நிலைபேறு அபிவிருத்தியின் 2030ஆம் ஆண்டு இலங்கை அடையப்போகும் முக்கியமான 17 இலக்குகளில் ஒன்றான உயிர்ப்பல்வகைமை மற்றும் கடல்வாழ்வளங்களைப் பாதுகாத்தல் என்ற விடயமும் எட்டப்படும் இலக்காக மாறும் என்பதும் திண்ணம்.





# காணாமல் போகும் 'கிழக்கின் கனவு தேசம்'

நூருல் ஹுதா உமர்

இலங்கை பாரிய இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கின்ற ஒரு தென்கிழக்காசிய நாடு என்ற அடிப்படையில், எதிர்காலத்தில் அனர்த்தங்களை மிக வெற்றிகரமாக எதிர்கொள்ளுவதற்கான சிறந்த திட்டம் அவசியமாகும் என ஹட்டர்ஸ் பீல்ட் பல்கலைக்கழக பேராசிரியரான றிச்சர்ட் ஹய்க், 2017 ஜனவரி 20 அன்று தென்கிழக்கில் வைத்து தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயலமர்வு ஒன்று மருதமுனையை சேர்ந்த பிரபல சமூக ஆர்வலர் எம்.ஐ.எம் வலீத்தின் ஏற்பாட்டில் நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் இலங்கை உள்ளூராட்சி அதிகார சபைகள் சம்மேளனத்தின் தேசிய இணைப்பாளர் ஹேமந்தி குணசேர, ஹட்டர்ஸ் பீல்ட் பல்கலைக்கழக பேராசிரியர் டிலாந்தி அமரதுங்க ஆகியோர் கலந்து கொண்டு, பங்கு பற்றுநர்களின் கருத்துகளை கேட்டறிந்து கொண்டதன் பின்னர், நிந்தவூரில் கடலரிப்பு இடம்பெறும் பகுதிகளைப் பார்வையிட்டதை தொடர்ந்தே, இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அதன் முக்கியத்துவம் அறியாமல் இருந்ததன் விளைவை இன்று இலங்கையின் கிழக்கு மாகாணம் அதிலும் குறிப்பாக அம்பாறை கரையோர பிரதேசங்கள் அனுபவிக்கின்றன. இலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாக, பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருவதோடு, அங்குள்ள மீனவர்களும் தொழில் நடவடிக்கைகளில் பெரிய சிக்கல்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

### வீதிக்கு வந்த மீன்பிடி வள்ளங்கள்

அம்பாறையில் கரையோர பிரதேசங்களின் ஜீவனோபாய தொழில்களில் ஒன்றான மீன்பிடி தொழிலானது, சுனாமியின் போது முற்றாக செயலிழந்த போதும், தற்போது அது ஓரளவுற்கு மீள உயிர்பெற்று வரும் நிலையில், கரைவலை மீன் பிடித்தொழில் உட்பட சகல மீன்பிடித்தொழிலும் செயலிழந்து வருகின்றது. இதனால் பல மீனவ குடும்பங்கள், பொருளாதார ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றன.

பாரிய கடலரிப்பு ஏற்பட்டுள்ளதால், தற்போது நிந்தவூரில் 100 மீற்றர் உள்நோக்கி வந்து கடற்கரை கொங்கிரீட் வீதிக்கு அருகு வரை அலை வருகின்றது. இந்த நிலை இவ்வாறு தொடர்ந்தால் எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் கடல் ஊருக்குள் புகும் அபாயமும் காணப்படுகிறது. மேலும், இந்தக் கடலரிப்புக் காரணமாக இப்பகுதியில் இருந்த தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, இப்பிரதேசத்திலுள்ள கரைவலைத் தோணிகள், ஆழ்கடல் தோணிகளை பாதுகாப்பாக வைக்க இடமில்லாமல் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். வீதியோரங்களில் மீன்பிடி வள்ளங்கள் நிறுத்திவைக்கும் நிலை உருவாகியுள்ளது.

ஒலுவில் துறைமுகத்தின் அலை அணை சுவர், கடலில் போடப்பட்டதன் பின்னரே, நிந்தவூர் பிரதேசம் அடங்கலாக, அம்பாறை கரையோர பிரதேசங்களில் கடலரிப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. தற்போது இத்துறைமுகம் படகுகள் துறைமுகமாக இருப்பதனால் கப்பல் துறைமுகத்திற்காக கடலில் போடப்பட்ட கடலலை சுவரினை அகற்றுவதன் மூலம் இப்பிரதேசத்தில் இடம்பெறும் கடலரிப்பை தடுக்க முடியும் என நம்பப்படுகிறது.

### அழிவை நோக்கி நகரும் கரைவலை மீன்பிடி

பாரம்பரிய மீன்பிடி முறைகளில் கரை வலை மீன் பிடிப்பும் ஒன்று. இந்தக் கரைவலை மீன்பிடி முறை இலங்கையிலும் தமிழகத்தின் சில கடலோர பகுதிகளிலும் இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது. பல்வேறு வகையான மீன்பிடித்தல் முறைகள் நடைமுறையில் உள்ளன. இதில் ஆழ்கடலில் வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்தல், தூண்டில் மூலம் மீன்பிடித்தல், கரைவலை மூலம் மீன்பிடித்தல் உள்ளிட்ட முறைகளில் மீன் பிடிக்கப்படுகிறது.

இலங்கையின் கிழக்கு கடற்கரை பகுதியில் உள்ள மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடி முறையான கரைவலையை பயன்படுத்தி மீன்பிடித்து வருகின்றனர். கடற்கரையிலிருந்து கடலில் குறிப்பிட்ட தொலைவுக்கு சிறிய படகில் (எஞ்சின் பொருத்தப்படாத தோணி) சென்று ஆங்கில 'யு' வடிவில் கரை வலையை அமைப்பார்கள். பின்னர் வலையின் இரு புறமும் கயிறு கட்டி இரண்டு குழுக்களாக கரையில் நின்று எல்லோரும் இணைந்து, கரையை நோக்கி வலையை இழுப்பார்கள். இவ்வாறு மீனவர்கள் பிடித்து வரும் மீன்களுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. பின்னர் பிடிக்கின்ற மீன்களை மீனவர்கள் விற்று மூன்று பங்காக பணத்தை பிரித்து கொள்வார்கள். அதாவது, வலைக்கும், படகுக்கும் ஒரு பங்கு. மற்ற இரண்டு பங்குகளை எத்தனை பேர் கரை வலையை இழுக்கிறார்களோ, அத்தனை பேருக்கும் சம பங்குகளாக பிரித்து கொள்வார்கள். இதில் ஒரு சில நாள்கள் 100 ரூபாய் வருமானமும் கிடைக்கும்; சில நாள்களில் ஆயிரம் ரூபாய்க்கும் மேல் வரை வருமானம் கிடைக்கும். சில நாள் வருமானம் இல்லாமல் வீட்டுக்கு செல்ல வேண்டி வரும். ஆனாலும் மீனவர்கள் இந்தத் தொழிலை ரசித்து ஒருவித காதலுடனே, செய்து வருகிறார்கள். இந்தக் கரைவலை மீன் பிடியில் அதிக ஈடுபடுபவர்கள் முதியவர்களாவர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச பகுதிகளில், கரைவலை மீன்பிடித் தொழிலானது முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக கரையோர மீனவர்கள் தெரிவிக்கின்றனர். பெரியநீலாவணை, மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர் உள்ளிட்ட பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக ஏற்பட்ட கடல்மட்ட வேறுபாடும், கடல்கொந்தளிப்பின் அதிகரித்த நிலையும் கடலரிப்பும் தான் இதற்கான காரணங்களாக உள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடல்நீரானது, கரைவலை தோணிகளை நிறுத்தி வைக்கும் இடங்களைக் காவு கொண்டுள்ளதுடன் மணல் பகுதிகளையும் அதிகமாக கடல் உள்ளே இழுப்பதன் காரணங்களாலும் தோணிகளைத் தள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கரைவலை இழுவை மீன்கள் பிடிக்கப்படாததன் காரணமாக, மீனின் விலையும் இப்பிரதேசங்களில் அதிகரித்துக் காணப்படுகிறது. கடல் கொந்தளிப்பு, இப்பிரதேசங்களிலிருந்து படிப்படியாக அதிகரித்து ஒலுவில், பொத்துவில் பிரதேச கரைவலையும் பாதிக்கக் கூடிய வாயப்பிருப்பதாகக் கூறப்படுகிறது

### துயரத்தில் இருக்கும் துயிலும் இடங்கள்

கடல்கொந்தளிப்பால் மீண்டும் பிரச்சினையை சந்திக்க தயாராகி வருகின்றது மாளிகைக்காடு, சாய்ந்தமருது ஜனாஸா மையவாடிகள். கடல்கொந்தளிப்பிலிருந்து மாளிகைக்காடு ஜனாஸா மையவாடியை பாதுகாக்க நிர்மாணிக்கப்பட்ட அணைக்கட்டுக்கு பக்கத்தில் 10- 12 அடி ஆழமான பாரிய குழிகள் விழுந்துள்ளதுடன் கடலரிப்பால் கடலை நோக்கி மண் இழுபட்டு சென்றுள்ளதால், அணைக்கட்டும் பலமிழந்து மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி ஆபத்தை சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை மீண்டும் எழுந்துள்ளது.

இது விடயம் தொடர்பில், அரச அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தும் பயனில்லாமல் இருக்கத்தக்கதாக, தடுப்புச்சுவரும் கடலலையில் அள்ளுப்பட்டு கடலுடன் கைகோர்க்க தயாராகி விட்டது. காரைதீவு இந்து மயானம் கடலை ஒட்டியிருப்பதால் அதுவும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கிறது. சாய்ந்தமருதில் புதிதாக ஜனாஸா மையவாடியை அமைக்க ஒதுக்கப்பட்டு, சுற்றுமதிகள் கட்டப்பட்ட இடமும் இப்போது கடலுக்கு இரையாகியுள்ளது.

### கடலரிப்புக்கு காரணம் என்ன?

அம்பாறை மாவட்டத்தின் கரையோரைப் பிரதேசங்களில் இவ்வாறு கடலரிப்பு தீவிரமடைவதற்கு, ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையே பிரதான காரணம் என, அப்பகுதி மக்கள் நீண்ட காலமாக கருத்து தெரிவித்து வருவது இங்கு கவனிக்கப்பட வேண்டியது. சுனாமி ஏற்படுத்திய அதிர்வால் புவித் தட்டுகளில் ஏற்பட்ட இடைவெளிகளின் காரணமாக, அலைகளின் வேகம் அதிகரித்துள்ளதாகவும், இந்நிலைமையால் கடலரிப்பு தீவிரமடைந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகமொன்றுக்கு 12 ஜனவரி 2020 அன்று தெரிவித்த தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல், ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் அமைந்துள்ளது கடலரிப்பை இன்னும் ஊக்கப்படுத்தியுள்ளதாக அப்போது கூறினார்.

ஒலுவில் துறைமுக நிர்மாணத்தால் ஏற்பட்டுள்ள கடலரிப்பு தொடர்பில் டென்மார்க் இல் உள்ள ஆல்பொர்க் பல்கலைக்கழகத்தால் மூன்றாந்தரப்பு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் ஒலுவில் துறைமுக நிர்மாணத்தால் ஏற்பட்டுள்ள கடலரிப்பை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும், இந்தக் கடலரிப்பின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மூன்று தீர்வுகளை அவர்கள் முன்வைத்திருந்தனர். அவற்றில் முதலாவது, மீன்முள் அமைப்பில் கடற்கரையோரத்தில் ஒரு கட்டுமானத்தை மேற்கொள்வதாகும். அதாவது, கடற்கரையோரத்துக்கு சமாந்தரமாக ஒரு கட்டுமானத்தினை செய்து, அதிலிருந்து குறுக்காக மேலும் சில கட்டுமானங்களை மேற்கொள்வதாகும். இதன்போது மணலை அலைகள் அரித்து வேறோரிடத்தில் படிய வைக்கும் செயன்முறை தடுக்கப்படும்.

இரண்டாவது செயன்முறை, கடலரிப்பால் அலைகள் எடுத்துச் செல்லும் மணல் எங்கு படிகிறதோ, அந்த மணலை கனரக வாகனங்கள் மூலம் ஏற்றிக் கொண்டு வந்து, மீண்டும் அரிக்கப்பட்ட இடத்தில் கொட்டுவதாகும்.

மூன்றாவது முறைமை, அலைத் தடுப்புகளை உருவாக்குவதாகும். ஒலுவில் பிரதேசத்தில் அலைத் தடுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளபோதும் அவை உரிய பலனைத் தரவில்லை.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவில் வாழ்ந்துகொண்டு மீன்டின் (தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்) இறக்குமதி செய்து சாப்பிடும் எமக்கு, மீனவர்களின் பிரச்சினை தெரிந்திருக்க வாய்ப்பில்லை. 'உள்ளே சென்றால் பிணம், வெளியே வந்தால் பணம்' என வாழும் இலங்கை மக்களான நமக்கு, தேசத்தின் பிரச்சினைகளை மூன்றாம் கண் கொண்டும் பார்க்க வேண்டியுள்ளது.

# தமிழ்க் கைதிகளின் விடுதலை விவகாரத்திலும் கரிசனை வேண்டும்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் இருக்கும் 'பொது மன்னிப்பு', கடந்த காலங்களில் அரசியல் இலாபத்துக்காக 'ஓர் அரசியல் ஆயுதமாக' மட்டுமே பயன்படுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டுகள் இன்னுமே கறை படிந்தனவாய் இருக்கின்றன. அந்தக் கறைகளை அகற்றுவதென்பது முடியாதது. ஏனெனில், ஜனாதிபதிக்கு பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் இன்னுமிருக்கிறது.

1978ஆம் ஆண்டு, அரசியலமைப்புக்குப் பின்னர், இன்றைய நாள்வரையிலான பொது மன்னிப்புகளைப் பார்க்கும்போது, அவை தெட்டத்தெளிவாகத் தெரிகின்றன. நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ், குற்றவாளியாக இனங்காணப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த விடுதலையின் ஊடாக, எதிர்கட்சியினர் ஏந்திப் பிடித்துக்கொண்டிருந்த மற்றுமொரு கோஷத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, தமிழ் அரசியல் கைதிகளுக்கான விடுதலைக்கோஷம் இனிமேல், சற்று உரக்கக்கேட்கும்; அறிக்கைகளும் தூள்பறக்கும்.

மரண தண்டனை கைதியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டார். தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும், சுமார் 15 ஆண்டுகளாகச் சிறைவாசம் அனுபவித்து வருவோரில் 16 பேரும், அன்றையதினமே பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டமையால், தமிழ் அரசியல் கைதிகளுக்கான விடுதலை கோஷம் மௌனித்தது.

தமிழ் அரசியல் கைதிகள் அத்தனைபேரும் விடுதலை செய்யப்படவில்லை. இதனிடையே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கூர்மையை தென்னிலங்கை மக்கள் அண்மைய காலங்களில் உணர்ந்துகொண்டிருக்கின்றனர். வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் 40 ஆண்டு காலமாக அச்சட்டத்தின் கெடுபிடிக்குள்ளே, சிக்கித்தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

புள்ளிவிவரத் தகவல்களின் பிரகாரம், 46 தமிழ் அரசியல் கைதிகள் 10 முதல் 26 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 22 பேருக்கு எதிராக தலா 10 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கட்டாய ஒப்புதல் வாக்குமூலத்தின் ஊடாகவே தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தடுப்புக்காவலில் இருந்த போதே, 11 கைதிகள் இறந்துவிட்டனர். கைதிகளின் உறவினர்கள் பலரும் இறந்துவிட்டனர். எஞ்சியிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் சிலவேளைகளில் பொதுமன்னிப்பு வழங்கப்படுமாயின் பலரும் குடும்பத்தை இழந்தவார்களாகவே, சொந்த ஊர்களுக்கு திரும்பவேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள், அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் அவலக்குரல், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காதுகளுக்கு கேட்டிருக்கின்றது. அதனால்தான், அவரது ஆட்சிக்காலத்தில் தமிழ் அரசியல் கைதிகளில் 16 பேருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது.

மீதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் மீது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கரிசனை காட்டவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# கல்முனை தமிழ்ப் பிரிவின் தரமுயர்வு?

**லக்ஸ்மன்**

கிழக்கின் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று கல்முனை (வடக்கு) தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகமாகும். அப்பிரதேச செயலகம் இன்னமும் தரமுயர்த்தப்படவில்லை. உண்ணாவிரதங்களையும் போராட்டங்களையும் நடத்தியதுடன் பல்வேறு நிர்வாக ரீதியான முயற்சிகளையும் அரசியல்வாதிகள், கல்முனை சிவில் சமூகத்தினர் மேற்கொண்டிருந்தபோதும் இதுவரையில் எதுவுமே நடைபெறவில்லை.

போராட்டங்களுக்கும் முயற்சிகளுக்கும் முடிவு கிடைக்காத நிலையில், தற்போது, இதுவரையில் அம்பாறை மாவட்டத்தின் பிரதேச செயலகங்களில் ஒன்றாகக் காட்டப்பட்ட கல்முனை வடக்கு (கல்முனை தமிழ் பிரிவு) பொது நிர்வாக அமைச்சின் இணையத்தளத்திலிருந்து நீக்கப்பட்டதாக சில தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் க. கலையரசன் தெரிவித்திருந்தார். இது வெறுமனே கருத்தாகக் கொள்ளப்படாது, ஆராயப்பட வேண்டியதொன்றாக உள்ளது.

இராஜாங்க அமைச்சராக இருந்த எஸ். வியாழேந்திரன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக, புளொட் அமைப்பின் உறுப்பினராக இருந்த பொழுது, உண்ணாவிரதங்களையும் போராட்டங்களையும் நடத்தினார். கோட்டாபய அரசாங்கத்தில் அவரால் கல்முனை பிரதேச செயலகத்தினைத் தரமுயர்த்திக் கொடுக்க முடியவில்லை. ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றபொழுது, ஜனாதிபதி தெரிவாகி ஒருவாரத்தில், கல்முனை தமிழ்ப் பிரிவு, தரம் உயரும் என்று முழக்கமிட்டார். இப்போது, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கிறார். வியாழேந்திரன் எந்தவோர் அமைச்சராகவும் இல்லை. அடுத்தவர், விடுதலைப் புலிகளின் கிழக்கு தளபதியாக இருந்து, அவ் அமைப்பிலிருந்து பிரிந்து அரசுடன் இணைந்து, பிரதி அமைச்சரான கருணா எனும் வி. முரளிதரன், கல்முனை விடயத்தில் பல உறுதிகளைக் கூறியிருந்தார்; ஒன்றும் நடைபெறவில்லை. கடந்த தேர்தலில், கல்முனை தமிழ்ப் பிரிவைத் தரமுயர்த்துவேன் என்ற தேர்தல் அறைகூவலுடனேயே போட்டியிட்டார். அவரது இந்த உறுதியை நம்பி வாக்களித்த மக்களுக்கு அம்பாறைக்கு தமிழ்ப் பிரதிநிதித்துவமே இல்லாமல் போனது. தமிழரசுக் கட்சியின் அப்போதைய செயலாளர் க.துரைராஜசிங்கம், தற்றுணிவில் தேசியப் பட்டியலில் கலையரசனை பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருந்தார்.

'நடைபெறுபவை எல்லாம் நாசமறுப்பாகவே இருக்கின்றன' என்பது போன்று, கல்முனை தமிழ்ப் பிரிவுக்கான துருப்புச் சீட்டை முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏதோ ஒரு வகையில் வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். தமிழர் அரசியலில், அரசுடன் தமிழ்ப் பிரதிநிதிகள் இணைவதும், தமிழர்கள் இணைந்து அமைச்சர்களாக இருப்பதும் ஒன்றும் வரலாற்றில் நடக்காத ஒன்றல்ல. இதுவும் கடந்தே போனதுதான் வரலாறு. இருக்கும் வரைக்கும் இருப்போம் முடிந்தவரைக்கும் உழைப்போம். ஏதோ காலம் கடத்துவோம் என்று வாழும் அரசியல் வாழ்க்கைக்குப் பெயர், ஆளும் கட்சியென்று மகிழ்ச்சி கொள்வோம். தம்மால் முடியாமல் போனதற்கு தமிழ்த் தேசிய தரப்பு மீது குற்றச்சாட்டுகளை அடுக்குகிறார்களே தவிர, வேறு ஒன்றும் நடைபெறவில்லை.

நாட்டில் இருக்கின்ற நிர்வாக நடைமுறைக்கு மாறாக, கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் மோசடிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைய பொருளாதார நிலைமைகளை விட, மிக மோசமானதொரு 'மாபியா'ச் செயற்பாடு கல்முனை வடக்குப் பிரதேச செயலக விவகாரத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனின் குற்றச்சாட்டு.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகப்பிரிவில், 29 கிராம சேவையாளர் பிரிவுகள் இருக்கின்றன. இந்தக் கிராம சேவையாளர் பிரிவுகள் அனைத்தும் பழம்பெரும் கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசங்களாகும். அவ்வாறிருக்கின்ற அந்த எல்லைகளை, கல்முனை தெற்குப் பிரதேச செயலகத்தோடு நிலஅளவை செய்து, கல்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கின்றார்கள்.

"இவ்வாறானதொரு மோசடி, எமது கல்முனை வடக்குப் பிரதேசத்திலே தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றது. கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தில் நிர்வாக ரீதியாக இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்குத் தெரியாமல் இந்த விடயங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. உண்மையிலே இது பாரிய மோசடியாகும்" என்பதும் பாராளுமன்ற உறுப்பினரது குற்றச்சாட்டு.

கிராமங்களின் வீதிகளின் பெயர்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வாழ்ந்த பிரதேசம், தற்போது 'இஸ்லாமாபாத்' என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நடவடிக்கைகள், கல்முனையில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற விடயமாக இருக்கின்றன. நாட்டில் இருக்கின்ற நிர்வாக நடைமுறைக்கு மாறாக, இப் பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் மோசடி நடைபெறுவதாகவே குற்றம்சாட்டப்படுகிறது.

அதேநேரத்தில், கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் செயற்பாடுகளை முடக்கும் நோக்கில், கல்முனை காணிப் பதிவகத்தில் கல்முனை வடக்குப் பிரதேச காணிப் பதிவேட்டினை இரத்துச் செய்து, பதிவாளர் நாயகத்தினால் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டு, பல வடங்களாக இயங்கி வந்திருக்கின்ற காணி நிர்வாக நடைமுறை இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

மிகக் குறைவான கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக பிரதேச செயலாளர் பிரிவுகள் காணப்படுகின்ற போதும், 29 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ள கல்முனை வடக்கு உப பிரதேச செலகமாகவே இருந்துவந்தது. இருந்தாலும் அது கூட இல்லாமல் செய்யப்பட்டு கல்முனை தெற்குடன் இணைக்கின்ற ஏற்பாடு அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை மட்டுமல்ல, கிழக்கிலுள்ள தமிழ் மக்களனைவரையும் கவலைக்குள்ளாக்கும் செயலாகும்.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம், 1989இல் சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் பிரிவாக இயங்கி 1993ஆம் ஆண்டு முதல் இற்றை வரை, உப பிரதேச செயலகமாக இயங்குகிறது. காணி, நிதிவளம் அற்றதாக இயங்கும் இப்பிரதேச செயலகத்திற்கு கணக்காளர் நியமிப்பு இதுவரையில் நடைபெறவில்லை. 'சாண் ஏற முழம் சறுக்கும்' தமிழர் அரசியலில், கடந்த நல்லாட்சியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் வலுப்பெற்ற வேளை, ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான முரண்பாடு, ஈஸ்டர் தாக்குதல், பிரதமர் மாற்றம், ஆட்சிக்குழப்பம் உள்ளிட்ட பல, சாத்தியங்களைக் குழப்பியடித்தது.

ஏற்கெனவே, 1993இல் அமைச்சரவை ஒப்புதல் கிடைத்து, அவ்வேளையில் நாட்டில் ஏனைய பகுதிகளில் இருந்த உப பிரதேச செயலகங்கள், பிரதேச செயலகங்களாக தரம் உயர்த்தப்பட்டன. அதற்குப் பின்னர், பல பிரதேச செயலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டும் இருக்கின்றன. இவ்வாறான நிலையில், கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகமே நிறைவுபெறாத ஒன்றாக உள்ளது.

கல்முனை தமிழ்ப் பிரிவு, 30 வருடங்களை தாண்டியும் நிறைவேறாத கனவாகவே இருந்து கொண்டிருக்கிறது. இதனை வைத்தே, முஸ்லிம் அரசியல்வாதிகளும், சில தமிழ் அரசியல்வாதிகளும் தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள்; காலத்தையும் கடத்துகிறார்கள்; மக்களையும் ஏமாற்றுகிறார்கள். ஆனால், யதார்த்தத்தினைச் சொல்வதற்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும்தான் ஆட்களில்லை. அந்தவகையில், கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் தொடர்பில் அரசியல் தலைவர்களது நடவடிக்கைகள் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை குலைப்பதாகவே அமைந்திருக்கிறது. நடைபெற்ற உண்ணாவிரதங்களும் அறிக்கைகளும் போராட்டங்களும் உத்தரவாதங்களும், இதுவரையில் எதனையும் சாதித்துவிடவில்லை.

அதன் தொடர்ச்சியாகத்தான் கல்முனையில் கடந்த சில வாரங்களாக உருவாகியிருக்கின்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்கள் வழங்கப்படாமல், திட்டமிட்டு தடுக்கப்படுவது கவலையானதே! இவ்வாறான சம்வங்களும் இன முறுகல் நிலைகளும் உருவாகாமல் தடுக்க, கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்களை வழங்கி, மக்கள் தங்கள் சேவைகளை வினைத்திறனாகவும் பாதிப்பின்றியும் பெறுவதற்கு, அரசாங்கம் தீர்வைக்காண வேண்டும் என்பதே எல்லோரினதும் அவாவாகும்.

அடிக்கடி ஒரு பொறி விழுவதும், அது பெருந்தீயாகப் பற்றி எரிவதும் பின்னர், தானாக அணைவதுபோன்று ஆகிவிடுவதைத் தான் தமிழ் மக்கள் தொடர்சசியாகக் கண்டு வருகின்றார்கள். 'பிட்டும் தேங்காய்ப்பூவும் போல' என்று பொது வெளியில் பேசிக்கொண்டு, உள்ளே வேறுவிதமாகச் செயற்படும் பாங்கு, கிழக்கில் தமிழ் - முஸ்லிம்களுக்கிடையில் இருக்கிறது என்பது வெளிப்படை. இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதே, அனைவருடையதுநிலைப்பாடாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை உருவான வேளை 'சிறுபான்மை', 'தமிழ்' என்றிருந்த தமிழ் - முஸ்லிம் மக்கள், காலப்போக்கில் பிரிந்து இருதுருவங்களானார்கள். அதன்பின்னர்தான் 'தமிழ்பேசும்' என்று மாற்றம் பெற்றது. அதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் இப்போதும் தமிழர் தரப்பு அவற்றையெல்லாம் மறந்து சகோதரர்களாக வாழ்வோம் என்றே சொல்கிறார்கள்; முயற்சி செய்கிறார்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தீராத நம்பிக்கையாக இருக்கின்ற முஸ்லிம்களின் இணக்கப்பாட்டுடன் கல்முனை தமிழ்ப்பிரிவு பற்றிய பிரச்சினை முடிவுக்குவர வேண்டும். அரசியல் தீர்வு விடயத்திற்கு மத்திய அரசில் இருக்கின்ற அதிகாரங்கள், அதிகமாகப் பகிர்வு செய்யப்பட வேண்டும் என்ற கருத்து ஓங்கி வருகின்றது.

இந்த நிலையில், மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கும், அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்கும் பிரதேச செயலகங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளுக்கு முறையே நிர்வாக அதிகாரங்களையும், அரசியல் அதிகாரங்களையும் பரவலாக்கம் செய்தாக வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்.



## வாழ்வியல் தரிசனம்

ஒரு சிலருக்கு வாழ்க்கையில் சில பிரச்சினைகள், துன்பங்கள் வந்தால், சுற்றியிருக்கும் உறவினர்கள், நண்பர்கள், "உங்களுக்கு காலம் சரியில்லை; எனவே, எதுவும் செய்யாமல் இருங்கள். காலம் மாறிவிட்டதும் பழைய நிலைக்கு வரலாம்" என்று புத்திமதி கூறுவார்கள்.

அவர்கள் இப்படிச் சொன்னால், சும்மா ஒருவர் இருக்க முடியுமா? துணிச்சலுடன் தங்கள் கடமைகளை நிறுத்த முடியுமா? எவ்விதமான துன்பங்கள் சூழ்ந்தாலும், வேலைகளை ஒத்திவைக்க முடியாதல்லவா?

ஆனால், பிரச்சினைகளுக்குள்ளும் உட்புகுதல்கூடாது. காரியங்களில் அவதானம் தேவை. எதிரிகள் மறைந்தே காரியங்களைச் செய்வார்கள். பய உணர்வுடன், தமது அன்றாடக் கடமைகளை, விருப்பமின்றி ஒதுங்கி நடக்க முயல்வது, கருமங்களை ஒத்திவைப்பதுமாக செயல்களை நிறுத்திவிட வேண்டும்.

வாழ்க்கை இயல்பானது. இதைக் கஷ்டமான விடயம் என்று ஒருபோதும் மனதில் நினைக்கக்கூடாது. ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் ஒவ்வொருவரும் செயற்பட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். இவை உங்களுக்குத் தெரியாதா? எல்லாமே நடக்கும்; என்றும் உங்கள் பணிகள் தொடரட்டும்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### முட்கொம்பன் காட்டில்
### அதிகாரிகளின் துணையுடன் மரங்கள் தறிக்கப்படுகின்றன

கிளிநொச்சி, முட்கொம்பன் காட்டுப் பகுதியில் தினமும் பெறுமதி வாய்ந்த காட்டு மரங்கள் வெட்டப்பட்டு, காடழிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு இடம்பெறும் காடழிப்புகளை கட்டுப்படுத்த வேண்டிய அதிகாரிகள், இது தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்வதில்லை என்றும் சில அதிகாரிகளின் துணையுடனேயே, இவ்வாறான காடழிப்புகள் இடம்பெற்று வருகின்றன. எனவே, இதனைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என, இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதாவது, பகல் வேளைகளில் இயந்திரங்கள் மூலம் பெறுமதி வாய்ந்த பாலை, முதிரை உள்ளிட்ட மரங்கள் வெட்டப்பட்டு, கனரக வாகனங்களில் ஏற்றப்பட்டு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளிட்ட பகுதிகளுக்கு எந்தவித அனுமதிப்பத்திரங்களுமின்றி, பகல் வேளைகளிலும் இரவு வேளைகளிலும் கொண்டு செல்லப்படுகின்றன. இவ்வாறான மரக்கடத்தல்கள், அதிகாரிகளினது துணையுடனேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் இதைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதி மக்கள் தமது வீட்டுத்திட்ட தேவைகளுக்கான மரங்களையோ அல்லது கட்டுமானத்தேவைகளுக்கான மணலையோ பெற்றுக்கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றபோதும், இவ்வாறு பெறுமதிவாய்ந்த காட்டு மரங்கள் மற்றும் மணல் எவ்வாறு வெளியிடங்களுக்கு கொண்டு செல்ல முடியும் என்றும் இப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

–சுப்பிரமணியம் பாஸ்கரன்

இன்றைய மாணவர்களின்

# பாதைமாறிய பயணங்கள்

## வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதாவின் ஆதங்கமும் வேதனையும்

ஏ. எச். ஏ ஹுஸைன்
husseinmedia000@gmail.com







“வாசித்தல் தேடலின்பால் மாணவர்களை நகர்த்த முயற்சிக்கும்போது எங்கள் பிள்ளைகள் எங்கள் கைகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகிக் கொண்டே போகின்றார்கள். இது வேதனையாகவும் கவலையளிப்பதாகவும் உள்ளது” எனத் தனது ஆதங்கத்தை வெளியிட்டார் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார்.

மாணவர்களை முன்னேற்றுவதற்கு, கல்வி அதிகாரிகளான நாங்களும் முயற்சிக்கிறோம். பாடசாலை அதிபர்களும் வழி காட்டுகின்றார்கள், ஆசிரியர்களும் பாடுபடுகின்றார்கள் ஆனாலும் வாசிப்பின்பால் பிள்ளைகளை ஈடுபடுத்த முடியாமல் தான் இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட, ஏறாவூரைச் சேர்ந்த எழுத்தாளர், ‘மதுபாரதி‘ எனும் புனைபெயர் கொண்ட திருமதி பரமேஸ்வரி இளங்கோ எழுதிய ‘பொய்யெல்லாம் மெய்யென்று’ நூல் வெளியீட்டு விழா, ஏறாவூர் மாஞ்சோலை மணி மண்டபத்தில் கடந்த வார இறுதியில் இடம்பெற்றபோது, கௌரவ அதிதியாக கலந்து கொண்ட அவர் இக்கருத்தை வெளியிட்டார்.




கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கே. சித்திரவேல் தலைமையில், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரம், கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி, மட்டக்களப்பு மற்றும் கல்குடா வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்ட நிகழ்வில், ஆசிரியர் மத்திய நிலைய விரிவுரையாளர் சுதாகினி நிகழ்வுகளை நடத்திச் செல்ல, ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதிபரும் எழுத்தாளரும் கவிஞருமான சுதாகரி மணிவண்ணன் நூலின் நயவுரையை வழங்கினார். அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட எழுத்துத்துறை சார்ந்த ஆர்வலர்களும் நலன் விரும்பிகளும் பிரசன்னமாகியிருந்த நிகழ்விலேயே கல்விப் பணிப்பாளர் சுஜாதாவின் ஆதங்கம் வெளிப்பட்டது.

வலயக் கல்விப் சுஜாதா கொண்டிருக்கும் கவலை எதிர்காலத் தலைவர்களான இன்றைய இளையோரின் எதிர்கால நிலைமைகளை புடம் போட்டுக் காட்டுவதாக அமைந்திருப்பதோடு அதுவொரு எச்சரிக்கை மணியாகவும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

இன, மத, மொழி பேதங்களுக்கப்பால் இளையோர் சமுதாயத்தின் பெரும்பாலானோர் இந்த விடயத்தில் ஏதோவொரு மாயையில் அள்ளுண்டு செல்கின்றார்கள் என்பது புலனாகின்றது.

அங்கு தொடர்ந்து தனது அவதானிப்பு அனுபவக் கருத்துகளை முன்வைத்த கல்விப் பணிப்பாளர் சுஜாதா, “தற்காலத்தில் பள்ளிப் பிள்ளைகளை நாங்கள் எழுத, வாசிக்கத் தூண்டுவது என்பது சிரமமாக இருக்கின்றது. எங்கள் பிள்ளைகள், எந்த அளவுக்கு இந்த தகவல் தொழில்நுட்ப யுகத்திலிருந்து அல்லது தொழில்நுட்பப் பொருட்களிலிருந்து ஆக்கபூர்வமாகக் கற்றுக் கொள்கின்றார்கள் என்பதும் புரியாமலுள்ளது. அல்லது, அவர்களிடம் இருப்பது கூட இல்லாமல் போய் விடுகின்றதா என்பதும் தெரியாமல் இருக்கின்றது.

“இப்பொழுதெல்லாம், நாங்கள் வழங்கிய பாடப் புத்தகங்களை மாணவர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளும்போது, அவற்றை கசங்காமல், மடியாமல், உருக்குலையாமல் புத்தம் புதிதாகவே திரும்ப எங்களிடம் ஒப்படைக்கின்றார்கள்.





“இது எதைக்காட்டுகின்றது என்றால், புத்தகங்கள் விரித்துப் பார்க்கப்படவில்லை என்பது தெரிகிறது. வாசிப்புப் பழக்கம் என்பது, கிட்டத்தட்ட இல்லை என்ற நிலையிலேயே மாணவர்கள் உள்ளார்கள். இந்த நிலைமை மாற வேண்டும்.

“மாணவர்கள் தங்களுக்கு கிடைக்கும் புத்தகங்களின் பெறுமதியை மதிப்பதில்லை. சாதாரணமாக அவர்கள் கைவசம் இருக்கின்ற பாட நூல்கள், சிறந்த அறிவுப் பொக்கிஷங்கள்.

“இலவசமாக விநியோகிக்கபப்டும் பாடப்புத்தகங்களில் ஒரு காலத்தில் அதன் விலை எவ்வளவு என்று அச்சிடப்பட்டது. இது மாணவர்களும் பெற்றோரும், குறைந்தபட்சம் இந்தப் புத்தகங்களின் விலை பெறுமதியையாவது அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பதால்தான் இவ்வாறு செய்யப்பட்டது.

“இப்பொழுதெல்லாம் மாணவர்களுக்கு பாடநூலில் உள்ள அனைத்து விடயங்களையும் தொகுத்துக் கொடுப்பதற்கு, ஓர் ஆசிரியர் அல்லது, ஒரு வழிகாட்டி அல்லது, யாரோ ஒரு உதவியாளர் தேவைப்படுகின்றார். ஏனென்றால், சுயமாக வாசித்து விளங்கிக் கொள்ள முடியாத நிலையில், தற்போதைய மாணவ சமூகத்தினர் உள்ளார்கள்.

“இப்படிப்பட்டதொரு சூழ்நிலைக்குள் பிள்ளைகள் வழிப்படுத்தப்பட்டார்களா அல்லது, தாங்களாகவே இத்தகைய ஒரு பொறிக்குள் விழுந்து விட்டார்களா என்பதில் கேள்விகள் உள்ளன. இது மன வேதனையாக இருக்கின்றது.

“நான் கணிதத்துறை சார்ந்த ஒருவராக இருப்பதால், எனது அனுபவ அறிவைக் கொண்டு சொல்வேன், உண்மையில் கணிதப் பாடத்துக்கு ஒரு வழிகாட்டி ஆசிரியர் தேவை இல்லை.

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு மிகவும் எளிதாக, எளிய உதாரணங்களுடன் கணிதப் புத்தகங்களில் பாடங்கள் செய்து காட்டப்பட்டிருக்கின்றன.

“இப்பொழுதெல்லாம் மாணவர்களுக்காக பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அவற்றை எவ்வாறோ குறிப்பிட்ட நேர அட்டவணைக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்ற ஒரு நோக்கமே தவிர, அவற்றின் தரம் பார்க்கப்படுவதில்லை. தரங்குறைந்த நிகழ்ச்சிகளை நடத்தி முடித்து விட்டு, கடமை முடிந்ததாக உட்கார்ந்து விடும் சூழ்நிலை இருக்கிறது.

“இவ்வாறு நிகழ்ச்சிகளைக் குறைத்து, தரமற்ற நிகழ்ச்சிகளை நடத்தி முடிக்கும்போது, எங்கள் பிள்ளைகளின் எழுத்தாற்றல், கலையார்வம் எல்லாமே மட்டுப்படுத்தப்பட்டு விடும்.

“இன்னொருபுறம் எங்கள் மாணவர்களின் பாடசாலை நிமிடங்கள், மணித்தியாலங்கள், நாள்கள் மிகவும் குறைவடைகின்றன. மாணவர்கள் பாடசாலைச் சூழலுக்கு வெளியே வேறுவேறு சிந்தனைகளில் மூழ்கி, ஏதேதோ தேவைகளை நாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

“இந்தச் சந்தர்ப்பத்தில் மாணவர்களுக்கு வழிகாட்டல்கள் தேவைப்படுகின்றன.

வழிகாட்டல்கள் இருந்தால்தான் அடுத்த தலைமுறைக்கான தலைவர்களாக தற்போதைய இளம் சமுதாயத்தினரை உருவாக்க முடியும்.

“இந்தக் கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் 15 ஆயிரம் புத்தகங்கள் என்ற அடிப்படையில் மாணவர்களை எழுதத் தூண்டினார்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக மிகக் குறைந்தளவு எண்ணிக்கையிலான மாணவர்களே எழுத முன்வந்தார்கன்.

“எழுத்தாற்றல், வாசிப்புத் திறமைகளுக்காக கல்வி அமைச்சு எடுக்கின்ற முயற்சிகளைத் தொடர்ச்சியாக செய்ய முடியாமல் அல்லது ஊக்குவிக்க முடியாமல் இருப்பது, பின்னடைவாகவே பார்க்கப்பட வேண்டும்.

“மாணவர்களை எழுத்தின்பால் ஊகப்குவிப்பதற்கு கல்வி அமைச்சு முயல்கிறது. ஆனால், அந்த முயற்சி தோற்றுப் போகிறது” என்றார்.

இளமை முதல், இறக்கும் வரை இடைவிடாது கற்றாலும், ஒருவரால் கல்வியில் முழுமை அடைய முடியாது. எனவேதான் ‘கற்றது கைம்மண் அளவு; கல்லாதது உலகளவு’ என்னும் தொடர் மக்களிடையே நிலவுகிறது.

கற்றவர்களுக்கு, கல்வியே ஒரு செல்வமாக உதவும் தன்மை கொண்டது. கல்விதான் இவ்வுலகில் வாழும் தகுதியை நமக்குத் தருகிறது. கல்விதான் நல்லது எது, தீயது எது எனப் பகுத்தறியக் கற்றுக் கொடுக்கிறது.

நல்ல புத்தகங்கள் அறிவுக் கண்ணைத் திறக்கும் திறவுகோல்கள். கல்வி ஒருவரை மட்டும் மேம்படுத்தாது. அவரைச் சார்ந்தவர்களையும் சமுதாயத்தையும், ஏன் முழு நாட்டையுமே உயர்த்த உதவும்.

“பெற்ற பிள்ளை கைவிட்டாலும், கற்ற கல்வி கைவிடாது” என்று மகாத்மா காந்தியடிகள் குறிப்பிடுகிறார். எந்தச் சமூகத்தை சேர்ந்தவராக இருந்தாலும், கல்வி கற்பதில் இருந்து விலகிச்செல்வது, ஆபத்தையும் அழிவையும் ஏற்படுத்தும்.

அரசாங்கப் பாடசாலைகளில் இலவசக் கல்வி. இலவச சீருடை, இலவச செருப்பு, இலவச புத்தகம், இலவச கணினி தொழில்நுட்ப வசதி என்று எவ்வளவோ வசதி வாய்ப்புகள் தரப்பட்டு, கல்வி அளிக்கப்படுகின்றபோது, அதைத் தவறாது பொறுப்போடு கற்று முன்னேற வேண்டும். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்கள்கூட, கல்வி கற்பதற்கு எந்தத்தடையும் இல்லை.

படிப்பில் விருப்பத்தை உண்டாக்கிக் கொண்டால், படிப்பு எளிதாகவும் சுகமாகவும் மாறும். கல்வியை கசப்பாக எண்ணாமல், பெருமையாக எண்ணிப் படிக்க வேண்டும்.

கல்வியைப் பெறுவது அனைவரினதும் உரிமை. அந்த உரிமையை விட்டுக் கொடுக்காமல் ஆர்வத்துடன் கற்க வேண்டும்.



மட்டக்களப்பில் உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ள

# பாரம்பரிய விதை நெல் உற்பத்தி



வ. சக்திவேல்
shagthivel@gmail.com











மட்டக்களப்பு மாவட்டம் விவசாயம், மீன்பிடி, கால்வடை வளர்ப்பு ஆகிய பிரதான தொழில்களைக் கொண்டுள்ள மாவட்டமாகும்.

குறிப்பாக, விவசாயத்தில் வேளாண்மைச் செய்கை, மேட்டுநிலப் பயிர் செய்கை என்பன சிறப்பிடம் பெறுகின்ற இந்நிலையில், நெல்லரிசிச் சோற்றை பிரதான உணவாகக் கொண்டுள்ளதால், வோளாண்மைச் செய்கை முக்கியத்துவம் பெறுகின்றது.

பழங்காலத்திலிருந்து மக்கள், மாடுகள் மூலம் ஏர்பூட்டி, உழவு செய்து, இயற்கைப் பொருட்களை உரங்களாகவும் கிருமிநாசினிகளாகவும், பாவனை செய்து, வயலில் விளைந்த நெற்கதிர்களை தாக்கத்தி (அரிவாள்) கொண்டு, கைகளால் அறுவடை செய்து, அதனை தடிகள் கொண்டு அடித்து அல்லது, மாடுகள் மூலம் மிதித்து, பத்திரப்படுத்தி உணவுக்குப் பயன்படுத்தி வந்தார்கள்.

இந்நிலையில், இடைப்பட்ட காலத்தில் வோளாண்மைச் செய்கைக்கு செயற்கை உரங்களும் இரசாயனக் கிருமி நாசினிகளினதும் பாவனைகள் ஊடுருவியதோடு, கைகளால் அறுவடை செய்யும் நிலைமை மாற்றமடைந்,து இயந்திரங்களாலேயே அறுவடை செய்யும் நிலைமையும் உருவாகியதுன.

இதனால், பரம்பரை பரம்பரையாக விவசாயிகளிடமிருந்த பாரம்பரிய நெல்லினங்களும் மெல்ல மெல்ல இல்லாமல் போய்விவிட்டன. இந்நிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு ஈடுகொடுக்கும் முகமாகவும், பாரம்பரிய நெல்லினங்களை விவசாயிகள் மீளவும், உற்பத்தி செய்யும் முகமாகவும், இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பாரம்பரிய விதை நெல் வழங்கப்பட்டிருந்தன.

பாரம்பரிய விதை நெல் உற்பத்திக் கிராமங்களை உருவாக்கும் முகமாக, கிழக்கு மாகாண ஆளுநரின் நிதி உதவியில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 187.5 ஏக்கரில் பாரம்பரிய நெல் உற்பத்தி சிறுபோகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதில் பச்சைப் பெருமாள், மடத்தவாலு உள்ளிட்ட பாரம்பரிய நெல்லினங்கள், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. இதன் அறுவடை நிகழ்வும் மதிப்பீட்டு நிகழ்வும், கடந்தவாரம் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராசாவின் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை செய்கை பண்ணப்பட்ட சிறுபோக நெல் அறுவடையின் ஒருபகுதியை, இம்மாவட்ட மக்களின் பாவனைக்கு முழுமையாகப் பயன்படுத்த, மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக, உணவுத் தட்டுப்பாடு நிலைமை, அனைவராலும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனடிப்படையில், இம்மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கை அறுவடையை, பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்துவதற்கான திட்டம், மாவட்ட மட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக, மாவட்ட மக்கள் எதிர்வரும் ஆறு மாதகாலத்துக்குத் தமக்குத் தேவையான உணவைச் சேமித்துக் கொள்வதற்காக, குறைந்தபட்டசம் ஒரு குடும்பத்திற்கு இரண்டு மூட்டை நெல்லைக் கொள்வனவு செய்து வைத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளையும், ஊக்குவிப்புகளையும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்துவரும் ஆறுமாத காலத்துக்கு மாவட்ட மக்களை, உணவுப் பற்றாக்குறையிலிருந்து தற்காத்துக் கொள்வது தொடர்பாக ஆலோசிக்கும் விசேட கூட்டம் அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் அண்மையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இதற்கமைவாக, இம்மாவட்டத்தில் நெல் அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து, நெல்லைக் கொள்வனவு செய்து, பொது மக்களுக்கு நேரடியாக வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் தனஞ்ஜயனின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இக்கூட்டத்தில், வறிய குடும்பங்கள் தமக்குத் தேவையான நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நிதியை, கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள அமைப்புகளினூடாக வட்டியற்ற கடனடிப்படையில் வழங்குவதற்குத் தேவையான ஆலோசனைகளும் அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டுள்ளன.

இதுதவிர, இம்மாவட்ட மக்கள் அனைவரு,ம் தமக்குத் தேவையான உணவுகளை பெற்றுக் கொள்வதற்காக, குடும்பத்துக்குக் குறைந்தபட்சம் இரண்டு மூட்டை நெல்லைக் கொள்வனவு செய்வதனூடாக, உணவுத் தட்டுப்பாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியும். அத்துடன், அதிக விலையேற்றம், பதுக்கல் மாபியாக்களிடமிருந்தும் மக்களைப் பாதுகாக்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், பொதுமக்கள் வீடுகளில் தமக்குத் தேவையான காய்கறி, பழமரக்கன்றுகளைக் கொண்ட வீட்டுத் தோட்டத்தைச் செய்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் சிறுபோக மற்றும் பெரும்போக வேளாண்மைச் செய்கைகளின்போது விவசாயிகள், அவ்வப்போது இடர்களையும், வெள்ளம், வரட்சி, காட்டு யானைகளின் துவம்சம் போன்ற அழிவுகளையும் எதிர்கொண்டுதான் வருகின்றார்கள்.

ஓர் ஏக்கர் வேளாண்மை செய்வதற்கு குறைந்தது 40,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்படும் இந்நிலையில், அழிவுகள் ஏற்படும்போது அரசாங்கத்தால் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை 3,000 தொடக்கம் 5,000 வரைக்குமாக இருப்பதானது, ஏற்றுக்கொள்ள முடியாததாகும் எனவும் விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

இம்முறை, குறிப்பிட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பாரம்பரிய விதை நெல்போன்று, அடுத்துவரும் பெரும்போகச் செய்கைக்கு அது மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும், தாம் உற்பத்தி செய்யும் நெல்லை இடைத்தரகளர்கள் அறாவிலைக்கு கொள்வனவு செய்வதைத் தவிர்ப்பதற்கும் அரசாங்கம் முறையான திட்டத்தை அமல்படுத்த வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுகின்றனர்.

எனவே, உலகுக்கே உணவளிக்கும் விவசாயத்தை உறுத்திப்படுத்த வேண்டியது அனைவரினதும் தலையாக கடமையாகும். காலத்துக்குக் காலம் மாறி மாறி வரும் அரசாங்கங்களும், தமது கொள்கைகளை அவ்வப்போது நடைமுறைப்படுத்தினாலும் அதன் உச்சப்பயனை விவசாயிகள் அடைந்ததாக இல்லை. எனவே அரசாங்கங்கள் காலத்துக்குக் காலம் மாறினாலும், விவசாயித்துக்கு நிலையான மாறாத கொள்கைகளை வகுக்க வேண்டும்.

கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும், அப்போதுதான் நிலைபேறான விவசாயம் செழித்தோங்கும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி

# ‘மயிலூரான்’ அரங்கம் தந்த மனநிறைவு






சபா தனுஜன்

நல்லூர் கந்தசாமி ஆலய மகோற்சவ காலத்தை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட கலை நிகழ்வுகள், சனிக்கிழமை (20) மாலை 05.30 மணியளவில், நல்லூர் ஆலய சூழலில் அமைந்துள்ள ‘மயிலூரான்’ அரங்கத்தில், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சு. வரதீஸ்வரன் தலைமையில், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மாவின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

நல்லூர் மகோற்சவ காலத்தையொட்டி, வருடாந்தம் பிரபலமான இந்திய கலைஞர்களுடன் இலங்கை கலைஞர்களும் இணைந்து முன்னெடுக்கும் ‘தெய்வீக சுகானுபவம்’ நிகழ்வின் தொடர்ச்சியாக அமைந்த இந்நிகழ்வில், இவ் வருடம் தவிர்க்க முடியாத காரணங்களால் இந்திய கலைஞர்கள் கலந்துகொள்ள முடியாமல் போனமையால், வடக்கு மாகாண கலைஞர்களின் பங்குபற்றலுடன் இவ்விழா சிறப்பாக நடந்தேறியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத்தூதுவராலயத்தின் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்து சிறப்பித்தார். மேலும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ. சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தின் ஆணையாளர் அ. சோதிநாதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வு. ஜோன் குயின்ரஸ், கல்வி அமைச்சின் உதவி செயலாளர் எஸ். சுரேந்திரன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை உபஅதிபர் ‘செந்தமிழ்ச் சொல்லருவி’ ச. லலீசன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

ஆரம்ப நிகழ்வாக, உரும்பிராய் ஸ்ரீசாயி கலைக்கழக மாணவர்களின் பக்தி இசை பாமாலை இடம்பெற்றது. அதையடுத்து, அரியாலை பிருந்தாவனம் கலாமன்ற மாணவர்களின் ‘கணநாய காய’ பரதநாட்டியம் நிகழ்வை அலங்கரித்தது. தொடர்ந்து, கல்வி அமைச்சின் செயலாளரால் தலைமையுரையும் யாழ். இந்திய துணைத் தூதுவரின் பிரதம விருந்தினர் உரையும், பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதி பணிப்பாளரின் சிறப்புரையும் இடம்பெற்றன.

தொடர்ச்சியாக கலைநிகழ்வுகள் வரிசையில், வவுனியா நிருத்திய ஸ்ரூதி நாட்டிய கலாலய மாணவர்களின் நடனமும், யாழ். வண்ணை கலைமன்ற மாணவர்களின் முருகன் நடனமும், மானிப்பாய் கலைக்கோவில் மாணவியின் பரதநாட்டியமும், இனுவையூர் குமரன் நர்த்தனாலயம் மாணவர்களின் சண்முகாஞ்சலி நடனமும் நிகழ்வை மெருகூட்டின.

தொடர்ந்து, கரம்பொன் முருகமூர்த்தி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கிராமியக் கதம்பம், பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவர்களின் ஆறுமுக அழகு பரதநாட்டிய ஆற்றுகை, காரைநகரைச் சேர்ந்த கலைஞர் வ. பன்னிருகையனின் ஹார்மோனிய இசை, அரியாலை ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவர்களின் நடன அர்ப்பணம், மன்னார் ஜெயானந்த ஜீவ நர்த்தனாலய மாணவர்களின் காவடிச்சிந்து, முருகன் கௌத்துவம் அரியாலை பிருந்தாவனம் கலாமன்ற மாணவர்களின் கோலாட்டம், நல்லூர் சாரங்கா இசைமன்ற மாணவர்களின் பக்திப்பாடல்கள் ஆகியன நிகழ்வை மேலும் சிறப்பித்தன.

கடந்தகால பெருந்தொற்று நெருக்கடிகளுக்குப் பின்னர், வெகு விமரிசையாக இடம்பெறும் இவ்வருட நல்லூர் உற்சவகாலத்தில், இடம்பெற்று வருகின்ற பல்வேறு கலை நிகழ்வுகளுக்கு மத்தியில், இக் கலைவிழாவானது தரமும் நேர்த்தியும் மிக்க பிரம்மாண்டமான கலை நிகழ்வுகளின் காரணமாகவும், தொய்வற்ற ஒழுங்கமைப்பின் காரணமாகவும் தனித்து தெரிந்ததொரு விழாவாக, பெருமளவான பார்வையாளர்களின் பங்குபற்றுதலுடன் மிகவும் மகிழ்ச்சியும் பிரமிப்பும் தந்த சிறந்த கலை அனுபவத்தையும் வழங்குவதாக அமைந்திருந்ததாகப் பலரும் தமது மகிழ்வை வெளிப்படுத்தினர்.

இத்தகைய விழாக்கள், இன்னும் வரவேற்று ஊக்குவிக்கப்படவேண்டும் என்பது அவர்களின் விருப்பாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்கது.










## பரத நாட்டிய அரங்கேற்றம்

### நாளை புதிய கதிரேசன் மண்டபத்தில் நிகழ்வு





நாட்டிய கலா மந்திர் ஸ்தாபக இயக்குனர் ‘கலாசூரி’ ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியும் திரு திருமதி கேதீஸ்வரன் தம்பதிகளின் புதல்வியுமான செல்வி அம்ரிதா கேதீஸ்வரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் நாளை ஞாயிற்றுக்கிழமை (28) மாலை 5.30 மணிக்கு, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நடன நெறியாள்கையில், அணிசேர் கலைஞர்களாக, குரலிசை - ஆரூரன், மிருதங்கம் - லோகேந்திரன் , வயலின் - திபாகரன், தாள தரங்கம் - ரட்ணம் ரட்ணதுரை, புல்லாங்குழல் - பிரியந்த ஆகியோரின் பங்களிப்புடன் அரங்கேற்றம் நடைபெறவுள்ளது.

இவ்வரங்கேற்ற நிகழ்விற்கு ‘கலைமாமணி’ ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதர்ஷன் (இயக்குநர், நிர்த்தனா பரத கலைக்கூடம்) பிரதம விருந்தினராகவும், ஆசிய இன்டர்நேஷனல் கல்லூரியின் அதிபர் ஹர்ஷன பெரேரா கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.




புத்தக வெளியீடு:

## மட்டக்களப்பு தமிழக பாரம்பரிய மருத்துவம்

### நாளை தேவநாயகம் மண்டபத்தில் நிகழ்வு

அதிரன்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளராகவும் கிழக்கு மாகாண பாலர் பாடசாலைப் பணியகத்தின் தவிசாளராகவும் பணியாற்றிய செட்டிபாளையத்தைச் சேர்ந்த பொன் செல்வநாயகம் எழுதிய ‘மட்டக்களப்பு தமிழக பாரம்பரிய மருத்துவம்’ என்ற புத்தக வெளியீடு, நாளை ஞாயிற்றுக்கிழமை (28) காலை 9.30 மணிக்கு, மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில், வவுனியா மாவட்ட வைத்தியசாலை டொக்டர் வ. வரணிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.




எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய வெளியீடாக வெளிவரும் இந்தப் புத்தக வெளியீட்டு நிகழ்வில், முதன்மை அதிதிகளாக முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி. சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம், மாவட்ட அரசாங்க அதிபர் க. கருணாகரன், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் தி. சரவணபவான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விசேட அதிதிகளாக, கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் வேந்தர் டொக்டர் வே. விவேகானந்தராஜா, வேந்தர் பேராசிரியர் மா. செல்வராசா, மேனாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

சிறப்பு அதிதிகளாக விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி சி. அமலநாதன், கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினம், கிழக்கு மாகாண முதலமைச்சின் மேனாள் செயலாளர் யு.எல்.ஏ. அஸீஸ், கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் மேனாள் செயலாளர் க. சிவநாதன், மீள்குடியேற்ற அமைச்சின் மேனாள் செயலாளர் சி. பாஸ்கரன், கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீட சிரேஷ்ட விரிவுரையாளர் டொக்டர் கு. த சுந்தரேசன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பளர் டொக்டர் கு. சுகுணன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண மேனாள் பணிப்பாளர் எந்திரி திருமதி கலைவாணி வன்னியசிங்கம், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தேசிய சம்மேளன மேனாள் உபதலைவர் பூ. பிரசாந்தன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கௌரவ அதிதிகளாக, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் கா. சித்திரவேல், பிரதேச செயலாளர்களான வெ. தவராசா, வ. வாசுதேவன், எஸ். எல். எம் ஹனீபா, திருமதி தெட்சணகௌரி தினேஷ், சோ. ரங்கநாதன், திருமதி ஜெயானந்தி திருச்செல்வம், அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் ஏ. ரி. எம் றாபி, கணக்காய்வு அத்தியட்சகர் ஏ. எம் மாஹிர் ஆகியோரும் கலந்துகொள்வர்.


பொன் செல்வநாயகம்

முதல் பிரதிகளை, மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சைவப் புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி, வடக்கு - கிழக்கு மாகாண ‘டெலிகொம்’ பொது முகாமையாளர் எந்திரி மு. பத்மசுதன், கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட மேனாள் பீடாதிபதி கலாநிதி சிவக்கொழுந்து பொன்னையா, ஒப்பந்தகாரர் இ. பஞ்சாமிர்தம் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

சிறப்பு அதிதிகள், கௌரவ அதிகளின் பங்கு பற்றலுடன் நடைபெறும் இந்நிகழ்வில், தமிழ்த்தாய் வாழ்த்தை செல்வி மகிஷா செல்வநாயகம் இசைக்க, புத்தக வெளியீட்டுரையை எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய மேலாளரும், தேசிய இளைஞர் பாராளுமன்ற மேனாள் உதவி பணிப்பாளருமான குழந்தை எழுத்தாளர் டொக்டர் ஓ. கே குணநாதனும், நூல் நயவுரையை கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் சிரேஷ்ட விரிவுரையாளர் முனைவர் ஞா. தில்லைநாதன் ஆகியோர் நிகழ்த்துவர். புத்தக எழுத்தாளர் பொன். செல்வநாயகத்தின் நன்றியுரை மற்றும் ஏற்புரையுடன் நிகழ்வு நிறைவு பெறும்.

தமிழர்களுடைய பழைய, மறைந்து போன கிராமிய பாரம்பரிய வைத்திய முறைகளை, இன்றைய இளம் சமூகத்துக்கும், எதிர்கால சமுதாயத்துக்கும் தெரியப்படுத்தும் நோக்கில், செட்டிபாளையத்தைச் சேர்ந்த பொன் செல்வநாயகம் எழுதியுள்ள ‘மட்டக்களப்பு தமிழக பாரம்பரிய மருத்துவம்’ என்ற புத்தகம் அமைந்துள்ளது.

சித்த, ஆயுர்வேதத் துறைகள், பல்கலைக்கழகங்களிலும் மருத்துவக் கற்கைகளாக நடைபெற்று வருகின்றன. இத்துறைகளில் கற்கின்ற மாணவர்களுக்கும் இப் புத்தகம் அறிதலின் பொருட்டு, பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு தமிழகத்தின் பாரம்பரிய மருத்துவத்தை உரைப்பதாக, இப்புத்தகம் எழுதப்பட்டிருந்தாலும் 1961ஆம் ஆண்டில், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை மாவட்டம் பிரிக்கப்பட்டதன் பின்னர் உள்ள எல்லையின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றது. அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே இருந்த பாரம்பரிய வைத்திய முறைகளும் இப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.





# அரங்கேற்றம்



கொழும்பு தியாகராஜர் கலைக்கோவில் இயக்குநருர் நாட்டிய கலைமாமணி ஸ்ரீமதி பவானி குகப்ரியாவின் மாணவிகளான அவினியா, சாகித்தியா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் 13ஆம் திகதி சனிக்கிழமை, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. அரங்கேற்ற நிகழ்வில், மாணவிகளின் நடனத்தோற்றங்களையும் பெற்றோர் மற்றும் ஆசிரியருடன் எடுத்துக்கொண்ட படங்களையும் காண்கிறீர்கள்.

(படங்களும் தகவலும்: எஸ். விஷான்)






# 'கரையோர வேர்கள்'

'ஸ்கை' தமிழ் வலையமைப்பின் வெளியீட்டில் சில்மியாபுரா நலன்புரிச் சங்கம் அனுசரணையில் சில்மியூர் முனீரா வாஹித் எழுதிய 'கரையோர வேர்கள்' நூல் வெளியீட்டு நிகழ்வு பதுளை மாவட்ட சில்மியாபுர அல்- முர்ஷித் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் எம். செய்யத் முஹம்மத் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், வெலிமடை வலய பிரதி கல்வி பணிப்பாளர்களான ஆர். எம் நவாஸ், ஜே. டி. எம் முர்ஷித் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் சிறப்பு அதிதிகளாக அதிபர்களான ஏ. எஸ் ரஹ்மத்துல்லாஹ், எச். எம் பதஹுல்லாஹ், கே. வேலாயுதம் மற்றும் அரசியல் பிரமுகரான ஏ. எம் இல்லியாஸ் ஆகியோர் உட்பட உலமாக்கள், ஊர் பிரமுகர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.

(படங்களும் தகவலும்: நூருல் ஹுதா உமர்)






# நன்றிக்கடன்



கிளிநொச்சி, முருகானந்தா கல்லூரியில் 1996ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதரம் கற்ற பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வும் ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்களை கௌரவிக்கின்ற நிகழ்வும் சனிக்கிழமை (20) முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் கஜநிதி பாலன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். பிரதம அதிதி, சிறப்பு விருந்தினர்கள், ஓய்வு நிலை ஆசிரியர்கள், அதிபர்கள் பான்ட் வாத்திய இசையுடன் 1996இல் கா.பொ.த சாதாரணதர கல்வி கற்ற மாணவர்களால் விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டு, நிகழ்வுகள் நடைபெற்றன, இதன்போது பாடசாலையில் கல்வி கற்பித்த அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

(படங்களும் தகவலும்: யது பாஸ்கரன்)






# கொழும்பு விவேகானந்தா கல்லூரியில்...

கொழும்பு, விவேகானந்தா கல்லூரியில், 1996ஆம் ஆண்டு க. பொ. சாதாரண 11E இல் கல்வி கற்ற பழைய மாணவர்கள், கல்லூரிக்கு 'ஸ்மார்ட் போர்ட்' (Smart Board) வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (19) கல்லூரி அதிபர் ரவி சந்திரிகா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில், பி. கிரிஷாந்த், வி. ராமகிருஷ்ணன், சு. ராஜேந்திரன், வி. ஜெகதீசன், பி. ரமேஸ்குமார், பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் யெ. ரவீந்திரகுமரன் ஆகியோர் இணைந்து, அதிபர் ரவி சந்திரிகாவிடம் கையளிப்பதையும் உதவி அதிபர்களான தெ. தேவசியானி, க. குணசுந்தர், ஸ்ரான்லி ரஞ்சித் ஆகியோரையும் காணலாம்.






# மருத்துவரின் சேவை பாராட்டு விழா

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பணியாற்றிய என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் சிவாநந்தன் சசிகரனின் சேவையைப் பாராட்டி, மாவட்ட பிரஜைகள் குழுவால் கௌரவிக்கப்பட்டார். இப்பாராட்டு நிகழ்வு, கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வில், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர்கள், பாடசாலை அதிபர்கள், பொறியியலாளர்கள், நலன் விரும்பிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

(படங்களும் தகவலும்: யது பாஸ்கரன்)






# உலக புகைப்படப் பிடிப்பாளர் தினம்

உலக புகைப்படப் பிடிப்பாளர் தினத்தை ஒட்டிய நிகழ்வு, கிளிநொச்சியில் புதன்கிழமை (24) கிளிநொச்சி மாவட்ட படப்பிடிப்பாளர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில், கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, படப்பிடிப்பாளர் சங்கத்தினால் கௌரவிப்பும் இடம்பெற்றது.

நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர், படப்பிடிப்பாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(படங்களும் தகவலும்: யது பாஸ்கரன்)



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 27 ஓகஸ்ட் 2022, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.